DOWNLOAD HINDU TAMIL APP & READ E-PAPER E-MAGAZINE & E-BOOKS IN OFFLINE
SPECIAL OFFER
E-PAPER
1 YEAR
Just Rs.549/-
Store.hindutamil.in


# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● புதன், ஜூலை 21, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.201

https://www.hindutamil.in

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

● 10 பக்கங்கள் ₹7


ஸ்ரீ வீராஸ்
பல ஜவுளிக்கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
மொத்த விலை கடை
சில்க்ஸ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட் கலெக்‌ஷன்ஸ்
sriveerascreations www.sriveeras.com

பெகாசஸ் உளவு மென்பொருள் விவகாரம்

## நாடாளுமன்றத்தில் 2-வது நாளாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளி

● இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைப்பு

■ புதுடெல்லி

பெகாசஸ் உளவு மென்பொருள் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் நேற்றும் அமளியில் ஈடுபட்டன.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்தக் கூட்டத் தொடர் ஆகஸ்ட் 13-ம் தேதி வரை நடைபெற உள்ளது. மக்களவை நேற்று முன்தினம் கூடியதும் தமிழகத்தைச் சேர்ந்த விஜய் வசந்த் உள்ளிட்ட புதிய உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர். இதையடுத்து புதிய அமைச்சர்களை அறிமுகம் செய்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெகாசஸ் உளவு மென்பொருள் விவகாரம் மற்றும் பெட்ரோல் விலை உயர்வு தொடர்பாக இரு அவைகளிலும் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து இரு அவைகளும் நேற்று முன்தினம் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

இஸ்ரேலை சேர்ந்த என்எஸ்ஓ என்ற நிறுவனம் தயாரித்த உளவு மென்பொருள் மூலம் இந்தியாவில் 40-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள், இரு மத்திய அமைச்சர்கள், நீதிபதி ஒருவர் என சுமார் 300 பேரின் செல்போன் ஒட்டுகேட்கப்பட்டதாக செய்தி வெளியானது.

இது நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியிலும் புயலை கிளப்பியுள்ளது. இந்த மென்பொருளை பயன்படுத்தி அரசு ஒட்டு கேட்கவில்லை என மத்திய அரசு விளக்கம் அளித்தபோதிலும் எதிர்க்கட்சிகள் ஏற்கத் தயாராக இல்லை.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று காலை மக்களவை கூடியதும் பெகாசஸ் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர். அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.யும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியின் மருமகனுமான அபிஷேக் பானர்ஜியின் செல்போன் எண்ணும் ஒட்டுகேட்புக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சி எம்.பி.க்கள் குற்றம் சாட்டினர். ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து விவகாரத்தை எழுப்பினர். அனைவரும் அமளியில் ஈடுபட்டனர்.

உறுப்பினர்களை இருக்கைக்கு செல்லுமாறு சபாநாயகர் ஓம் பிர்லா கேட்டுக்கொண்டார். ஆனால் உறுப்பினர்களின் தொடர் அமளி காரணமாக அவை அடுத்தடுத்து பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.பின்னர் மீண்டும் கூடிய நிலையில் வியாழக்கிழமைக்கு அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதுபோல் மாநிலங்களவை நேற்று காலை கூடியதும் பெகாசஸ் விவகாரம் உள்ளிட்ட பல்வேறுபிரச்சினைகளை எழுப்பி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை 2 முறை ஒத்தி வைக்கப்பட்டது. இதையடுத்து பகல் 1 மணிக்கு அவை கூடியதும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து விவகாரத்தை எழுப்பினர். அவையின் மையப் பகுதிக்கு வந்து, ‘எங்களுக்கு நீதி வேண்டும்’ என அவர்கள் முழக்கமிட்டனர்.

“உறுப்பினர்களை இருக்கைக்கு திரும்ப வேண்டும், கரோனா பெருந்தொற்று குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும்” என அவையின் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் கேட்டுக்கொண்டார். அவை முன்னவர் பியூஷ் கோயலும் இதை வலியுறுத்தினார். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதை ஏற்கவில்லை.

அதேவேளையில் விவாதத்தை தொடங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை அவையின் துணைத் தலைவர் கேட்டுக்கொண்டார். ஆனால் அமளிக்கு மத்தியில் அவர் பேச மறுத்துவிட்டார். இதையடுத்து நியமன உறுப்பினர் ஸ்வபன் தாஸ் குப்தா பேசத் தொடங்கினார். ஆனால் உறுப்பினர்களின் அமளியால் அவையை 15 நிமிடங்களுக்கு துணைத் தலைவர் ஒத்தி வைத்தார்.

பிற்பகலில் அவை கூடியதும் கரோனா தொடர்பான விவாதம் நடைபெற்றது. பிறகு வியாழக்கிழமைக்கு அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மாயாபஜார் 8-ம் பக்கத்தில்..

முதலீடுகளை ஈர்ப்பதற்கான கட்டமைப்பை உருவாக்க முதல்வர் ஸ்டாலின் உறுதி

## 35 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

● 49 திட்டங்களில் ரூ.28,508 கோடி முதலீடு ● 83,000 பேருக்கு வேலை

■ சென்னை

தமிழக தொழில் துறை சார்பில் ‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி- தமிழ்நாடு’ என்ற நிகழ்ச்சி, நேற்று சென்னையில் நடைபெற்றது. இதில், 35 நிறுவனங்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகின.

இதுதவிர மேலும் 9 திட்டங்களுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டியதுடன், 5 திட்டப்பணிகளையும் தொடங்கி வைத்தார். இதன்படி மொத்தம் 49 திட்டங்களுக்கு ரூ.28,508 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளதால் 83,482 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகத்தில் முதலீடு செய்யும் புதிய தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க, 5 நிறுவனங்களுக்கு முதல்வர் மானியம் வழங்கினார்.

விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைக்கான விமானம், உதிரிபாகங்கள் உற்பத்தியை மேம்படுத்த ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தின் திறன்மிகு மையம் அமைக்க, முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



▲ ’முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு’ எனும் நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில் புதிய முதலீட்டு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் இறையன்பு மற்றும் முதலீட்டாளர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். படம்: ம.பிரபு

தொடர்ந்து நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: பண்பாட்டின் முகவரியாக உள்ள தமிழகம், முதலீட்டாளர்களின் முகவரியாக மாற வேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறோம். கரோனா தாக்கத்தின்போது மருத்துவ நெருக்கடி மட்டுமின்றி, நிதி நெருக்கடியையும் எதிர்கொண்டோம். முதல்வர் பொது நிவாரண நிதிக்கு எனது கோரிக்கையை ஏற்று 2 மாதத்தில் ரூ.489.78 கோடி நிதி திரண்டது.

உலகளவில் உற்பத்தித்துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருந்தாலும், தமிழகத்தின் பொருளாதாரம் புத்துணர்வு பெற்று இயங்க தொடங்கியுள்ளது. தெற்காசியாவிலேயே தொழில்புரிவதற்கு உகந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்துவதே எங்கள் லட்சியம். வரும் 2030-க்குள் ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட பொருளாதாரமாக தமிழகத்தை உருவாக்குவதே அரசின் குறிக்கோள். இதை நோக்கி பயணிக்க மேம்படுத்தப்பட்ட ஒற்றைச்சாளர இணையதளம் 2.0 தொடங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ளவர்களுக்கு மட்டுமின்றி, புதிய முதலீட்டாளர்களுக்கும் உதவும் வகையில், 24 துறைகளின் 100 சேவைகளும் அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் கூடுதலாக 210 சேவைகளும் கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். இந்த இணையதளத்தின் செயல்பாட்டை நானே நேரடியாக கண்காணிப்பேன். புதிய முதலீடுகளைப் பெருமளவு ஈர்க்க, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். மேலும், ரூ.500 கோடியிலான தொழில் மேம்பாட்டு நிதியை உருவாக்க உத்தரவிட்டுள்ளேன். முதல் கட்டமாக இதற்காக ரூ.95.84 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பொது உற்பத்தி, ஆட்டோமொபைல், ஜவுளி, காற்றாலை கலன்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணு வன்பொருட்கள் உள்ளிட்டவைகளின் உற்பத்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். தொழில்துறைப்புரட்சி 4.0 என்ற நான்காம் தொழில்துறை புரட்சி நம் மாநிலத்துக்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பாகும். மேலும் ஏற்றுமதிக் கொள்கை, மருந்து பொருட்கள் மற்றும் உயிரிநுட்பக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் கொள்கைகளை வெளியிடவுள்ளோம்.

இன்று, புதிய தொழில் தொடங்க 35 நிறுவனங்கள் அரசுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. இதன்மூலம் ரூ.17,141 கோடி முதலீட்டுடன் 55,054 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும், அடிக்கல் நாட்டப்பட்ட 9 திட்டங்கள் மூலம் ரூ.4,250 கோடி முதலீடு மற்றும் 21,630 பேருக்கு வேலையும் 5 நிறுவனங்களின் வணிக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதன் மூலம் ரூ.7,117 கோடி முதலீடு மற்றும் 6,798 பேருக்கு வேலையும் கிடைக்கும். மொத்தமாக, 49 திட்டங்கள் மூலம் ரூ.28,508 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. 83,482 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மோட்டார் வாகன உதிரிபாகங்கள், தொழில் பூங்காக்கள், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பச் சேவைகள், ஜவுளி, மருந்துப்பொருட்கள் ஆகிய பல்வேறு துறைகளில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை என தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக இவை அமைய உள்ளன.

அதிகப்படியான முதலீடுகளைத் தாருங்கள். அதன் மூலமாகத் தமிழ்நாட்டு இளைஞர்களின் மனிதவளத்துக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்பை உறுதி செய்யுங்கள். இவ்வாறு முதல்வர் பேசினார்.

நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலர் வெ.இறையன்பு, தொழில்துறை செயலர் என்.முருகானந்தம், தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் பூஜாகுல்கர்ணி, இந்திய தொழில் கூட்டமைப்பு தலைவர் சி.கே.ரங்கநாதன், டைம்லர் நிறுவன இந்திய பிரிவு தலைமை செயல் அலுவலர் கார்ல் அலெக்சாண்டர் செய்டல், டிசிஎஸ் முதன்மை செயல் அலுவலர் என். கணபதி சுப்பிரமணியம் பங்கேற்றனர்.









# பளிச் பத்து 21

தொகுப்பு: பி.எம்.சுதிர்





- கடற்பகுதியில் 6.5 ரிக்டர் அளவுக்கு மேல் பதிவாகும் நிலநடுக்கங்களால் சுனாமிகள் ஏற்படுகின்றன.
- சுனாமிகள் மணிக்கு 700 கிலோமீட்டர் வேகத்தில் கரையைத் தாக்கும்.
- சுனாமிகளின்போது கடல் மட்டம் 10 அடிகள் வரை உயரும்.
- இந்தியப் பெருங்கடலில் 2004–ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளைச் சேர்ந்த 2.40 லட்சம் பேர் உயிரிழந்தனர்.
- 2004–ல் ஏற்பட்ட சுனாமி, 23 ஆயிரம் அணுகுண்டுகளின் ஆற்றலைக் கொண்டதாக இருந்தது.
- 80 சதவீதம் சுனாமிகள், பசுபிக் பெருங்கடல் பகுதியிலேயே ஏற்படுகின்றன.
- ஒரே பகுதியில் ஆண்டுக்கு 2 முறைகூட சுனாமி தாக்க வாய்ப்புகள் உள்ளன.
- பொதுவாக சுனாமியின் முதல் அலையால் அதிக பாதிப்பு ஏற்படாது. அடுத்தடுத்த அலைகளால்தான் அதிக பாதிப்பு ஏற்படும்.
- சுனாமி அலைகள் அதிக அளவில் தாக்கும் நாடாக ஜப்பான் உள்ளது.
- 1956–ம் ஆண்டு ஹவாய் தீவை தாக்கிய சுனாமியின்போது கடல் மட்டம் 50 அடிவரை உயர்ந்தது.

## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

# 21-07-2021

பிலவ 5 ஆடி

புதன்கிழமை

திதி : துவாதசி பிற்பகல் 2.55 வரை. அதன் பிறகு திரயோதசி.
நட்சத்திரம் : கேட்டை மாலை 5.37 வரை. அதன் பிறகு மூலம்.
நாமயோகம் : பிராம்யம் பிற்பகல் 3.46 வரை. அதன் பிறகு ஐந்திரம்.
நாமகரணம் : பாலவம் பிற்பகல் 2.55 வரை. அதன் பிறகு கௌலவம்.
நல்ல நேரம் : காலை 6.00–7.30, 9.00–10.00, மதியம் 1.30–3.00, மாலை 4.00–5.00, இரவு 7.00–10.00 மணி வரை.
யோகம் : சித்தயோகம் மாலை 5.37 வரை. பிறகு மந்தயோகம்.
சூலம் : வடக்கு, வடகிழக்கு நண்பகல் 12.24 மணி வரை.
பரிகாரம் : பால்
சூரிய உதயம்: சென்னையில் காலை 5.52 **அஸ்தமனம்:** மாலை 6.37

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | மதியம் 12.00–1.30 | நாள் | வளர்பிறை |
| எமகண்டம் | காலை 7.30–9.00 | அதிர்ஷ்ட எண் | 1, 3, 6. |
| குளிகை | காலை 10.30–12.00 | சந்திராஷ்டமம் | பரணி, கார்த்திகை |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
T.NAGAR LKS GOLD HOUSE (P) LTD SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** அடிக்கடி உணர்ச்சிவசப்படுவீர்கள். எதிலும் ஒரு பிடிப்பற்ற போக்கு காணப்படும். செரிமானக் கோளாறு வந்து செல்லும். மாலை முதல் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வாகனம் செலவு வைக்கும்.

**ரிஷபம்:** பொறுப்புகளும், பதவிகளும் தேடி வரும். உறவினர், நண்பர்களுடன் மனம்விட்டுப் பேசுவீர்கள். ஆனால் எதிலும் எச்சரிக்கை தேவை. மூத்த சகோதரரால் நன்மை உண்டு.

**மிதுனம்:** உங்களின் நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். விஐபிகள் அறிமுகமாவார்கள். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். ஆன்மிகப் பயணம் ஏற்படும்.

**கடகம்:** எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அதை எதிர்கொண்டு சமாளிக்கும் மனோபலமும், வலிமையும் உண்டாகும். நவீன மின் சாதனங்கள் வாங்குவீர்கள். பணவரவு உண்டு.

**சிம்மம்:** எதையும் சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கை வரும். நேர்மறை சிந்தனைகள் பிறக்கும். பிரபலங்கள் பக்கபலமாக இருப்பார்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். மனஉறுதி அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகள், பொதுவிழாக்களில் முதல் மரியாதை கிடைக்கும். எதிர்கால திட்டங்கள் குறித்து ஆலோசிப்பீர்கள்.

**துலாம்:** தடைகள் பல வந்தாலும் தளராமல் சாதிக்க முற்படுவீர்கள். எடுத்த வேலையை முடிக்காமல் ஓயமாட்டீர்கள். கோயில் விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் திறமை மீது அவ்வப்போது சந்தேகம் வரும். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பது நல்லது.

**தனுசு:** மன இறுக்கத்துடன் காணப்படுவீர்கள். நீண்டதூரப் பயணம் வேண்டாம். வழக்கில் வழக்கறிஞரை கலந்தாலோசித்து முடிவெடுங்கள். அடுத்தவர் விவகாரத்தில் தலையிடவேண்டாம்.

**மகரம்:** எதிர்ப்புகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். விஐபிகள் அறிமுகமாவார்கள். பங்கு வர்த்தகம் மூலம் பணம் வரும். பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கடன் பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வீடு கட்ட வரைபட அனுமதி கிடைக்கும். தாயார் ஆதரவாக இருப்பார்.

**மீனம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழிலதிபர்கள் அறிமுகமாவார்கள். தடைபட்டிருந்த வீடு கட்டும் வேலையை மீண்டும் தொடர்வீர்கள். திடீர் பயணம் ஏற்படும்.

### அமைதி, நல்லிணக்கம், ஆரோக்கியத்தால் மக்களை வளப்படுத்தட்டும்

# ஆளுநர், முதல்வர், அரசியல் தலைவர்கள் பக்ரீத் பெருநாள் வாழ்த்து

■ சென்னை

ஈகைத் திருநாளான பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி ஆளுநர் பன்வாரிலால், முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திகள்:

**ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்:** ஈகைத் திருநாளாம் பக்ரீத் நன்னாளில் முஸ்லிம் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள். இந்த புனித நாள் அன்பு, சகோதரத்துவம் மற்றும் சேவையை பறைசாற்றுகிறது. இந்நாள், அமைதி, நல்லிணக்கம், பெருந்தன்மை, ஆரோக்கியத்தால் மக்களை வளப்படுத்தட்டும்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** முஸ்லிம் பெருமக்கள் அனைவருக்கும் தியாகப் பெருநாளான பக்ரீத் பெருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். 'அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும்; அறநெறிகள் தவறாமல் வாழ்ந்திட வேண்டும்' என்ற உயரிய கோட்பாடுகள், முஸ்லிம்களின் கண்ணின் மணிகளாக என்றும் இருந்து வருகின்றன. நபிகள் நாயகத்தின் போதனைகளுக்குச் சிறப்பும், பெருமையும் சேர்க்கும் முஸ்லிம் பெருமக்கள் அனைவரும், இந்தத் தியாகப் பெருநாளை மகிழ்ச்சியுடனும், கரோனா கட்டுப்பாடுகளைப் பின்பற்றியும் கொண்டாட வேண்டுகிறேன்.

**அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் கே.பழனிசாமி:** விட்டுக்கொடுத்தலும், ஈகை புரிதலும், மத நல்லிணக்கமும், மனித நேயமும் தழைத்தோங்க வேண்டும். அனைவர் வாழ்விலும் வளமும், நலமும் பெருகிட வேண்டும். முஸ்லிம் பெருமக்கள் அனைவருக்கும் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் வழியில் எங்கள் பக்ரீத் திருநாள் நல்வாழ்த்துகள்.

**மதிமுக பொதுச்செயலாளர் வைகோ:** தமிழகத்தில் காலம்காலமாக உறவுமுறை கூறி உணர்வுப்பூர்வமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் முஸ்லிம் பெருமக்கள், சகோதர சமயத்தாருடன் விருந்துண்டு மகிழ்ந்து, சமய நல்லிணக்கத்துக்கும், சமூக ஒற்றுமைக்கும் வலுசேர்க்க வாய்த்திட்ட பொன்னாள்.

**பாமக நிறுவனர் ராமதாஸ்:** இறைபக்தியையும் கடந்து ஈகை திருநாள் வலியுறுத்தும் செய்தி, இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவவேண்டும்; அண்டைவீட்டாருடன் நல்லுறவைப் பாராட்ட வேண்டும் என்பதாகும். அன்பு, நல்லிணக்கம், ஈகை, மாற்றுத்திறனாளிகள் மீதான கருணை என்றும் நீடிக்க வேண்டும்.

**தேமுதிக தலைவர் விஜயகாந்த்:** முஸ்லிம் பெருமக்கள் அனைவரும் நலமுடனும் வளமுடனும், சமவாய்ப்பும், சமஉரிமையும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

**ஐயுஎம்எல் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொய்தீன்:** இந்தியர்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்ற உணர்வில், அன்பும், அறனும் பெருகிட, ஒன்றிணைந்து உழைப்போம், உயர்வோம், தேசத்தை உயர்த்துவோம்.

**மமக தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா:** தியாகத்தின் பெருமையை உலகுக்கு விளக்கும் உன்னதப் பெருநாள் தியாகத் திருநாள். மனிதர்கள் மீது காட்டப்படும் அன்பும், அக்கறையும் தான், உலகில் அமைதியையும் மகிழ்ச்சியையும் தழைத்தோங்கச் செய்யும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், தவாக தலைவர் தி.வேல்முருகன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், அமமுக பொதுச்செயலர் டிடிவிதினகரன், சமக தலைவர் சரத்குமார், மஜக பொதுச்செயலர் மு.தமிமுன் அன்சாரி, பாப்புலர் ஃப்ரண்ட் மாநில தலைவர் எம்.முகம்மது சேக் அன்சாரி, மூவேந்தர் முன்னணிக்கழக தலைவர் டாக்டர் ந.சேதுராமன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் ஜெ.ஹாஜாகனி, ஐஜேகே தலைவர் ரவிபச்சமுத்து, சு.திருநாவுக்கரசர் எம்பி., பாமக இளைஞர் அணி தலைவர் அன்புமணி உள்ளிட்ட தலைவர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

### ஓபிசி பிரிவினருக்கு சான்றிதழ் வழங்க

# பெற்றோரின் வருமானத்தை கணக்கிட வேண்டாம்

● மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அறிவுரை

■ சென்னை

ஓபிசி வகுப்பினருக்கு சான்றிதழ் வழங்கும்போது பெற்றோரின் ஆண்டு வருமானத்தில் ஊதியம் மற்றும் விவசாய வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் தாமதமின்றி சான்றிதழ் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது,

இதுதொடர்பாக தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை முதன்மை செயலர் ஆ.கார்த்திக், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

மத்திய அரசு பணிகளிலும், மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (ஓபிசி) வளமான பிரிவினரை நீக்கி 27 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

அந்த வகையில், வளமான பிரிவினரை நீக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பை (ஆண்டு வருமானம் ரூ.8 லட்சம்) ஊதியம் மற்றும் விவசாய வருமானத்தை சேர்க்கக் கூடாது என வழிகாட்டு நெறிமுறையில் விளக்கப்பட்டுள்ளது.

எனவே, மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி ஓபிசி வகுப்பினருக்கு சான்றிதழ் வழங்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சான்றிதழ் வழங்கும்போது பெற்றோரின் ஆண்டு வருமானத்தில் ஊதியம் மற்றும் விவசாய வருமானத்தை கணக்கில்கொள்ளாமல் எவ்வித தாமதமின்றி ஓபிசி சான்றிதழ் வழங்குமாறு சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு தகுந்த அறிவுரைகள் அளிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### செல்போன்கள் ஒட்டுக்கேட்பு விவகாரம்:

# சென்னையில் நாளை காங்கிரஸ் போராட்டம்

■ சென்னை

அரசியல் கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களின் செல்போன்கள் ஒட்டுக்கேட்கப்பட்ட விவகாரத்தில், மத்திய அரசைக் கண்டித்து சென்னையில் நாளை காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். இதுதொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

"2019 மக்களவை தேர்தலின்போது பெகாஸஸ் ஸ்பைவேர் மென்பொருளைப் பயன்படுத்தி முக்கியத் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாக வந்துள்ள செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினை தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பின்கீழ் நீதி விசாரணை நடத்தக் கோரியும், உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து அமித் ஷா விலகக் கோரியும் நாடு முழுவதும் காங்கிரஸ் சார்பில் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதன்படி, தமிழகத்தில் வரும் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு ஆளுநர் மாளிகை வரை நடைபெறவுள்ள மாபெரும் பேரணியில், கட்சியின் மூத்த தலைவர்கள், எம்எல்ஏக்கள், நிர்வாகிகள், சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் திரளாகப் பங்கேற்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

# தியாகத்தின் மகத்துவத்தை உணர்த்தும் ஹஜ்ஜுப் பெருநாள்

**மவ்லானா. அல்ஹாஜ் ஏ.ஷேக்நூரிஹள்ரத்**



அல்லாஹுவின் அருளினால் முஸ்லிம்கள் தியாகப் பெருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை இன்று உவகையுடன் கொண்டாடுகின்றனர். 'ஈதுல் அழ்ஹா' எனப்படும் தியாகப் பெருநாள், இறைவனுக்காக மனிதன் செய்த மிகப் பெரும் தியாகத்தை நினைவுபடுத்திக் கொண்டாடுவதாகும். இஸ்லாத்தின் 5-வது கடமை 'ஹஜ்' கடமையாகும். தகுதியுள்ள அனைத்து முஸ்லிம்களும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவது அவசியமாகும். வல்ல நாயன், அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

"மனித இனத்துக்கு ஹஜ் (புனித பயணம்) குறித்து பிரகடனப்படுத்துவீராக. அவர்கள் நடந்தும், தொலைதூரப் பாதைகளிலிருந்து வரும் ஒவ்வொரு (நெடும் பயணத்தால்) மெலிந்த ஒட்டகங்களிலும் உம்மிடம் வருவார்கள். அதன் நற்பலனை அவர்களுக்காகக் காணவும், அவர்களுக்கு அவன் அளித்துள்ள கால்நடைகள் மீது ஒரு குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரை நினைவுகூரவும் (அவர்கள் வருவார்கள்) பின்னர், அவற்றிலிருந்து உண்ணுங்கள். மேலும் கஷ்டத்திலிருப்பவர்களுக்கும் வறியவர்களுக்கும் (அதிலிருந்து) உணவளியுங்கள்." (ஸூரத்துல் ஹஜ்: 28,29)

ஹஜ் கடமை ஓர் ஆன்மிகப் பயணமாகும். இதன்மூலம் பெறப்படும் ஆன்மிக அனுபவம், கிடைக்கும் பயிற்சிகள், மனிதனுக்கு இறை நெருக்கத்தை அதிகரிக்கச் செய்கிறது. இறையச்சம், உளப்பக்குவம், தியாக சிந்தனை, ஒற்றுமை, பொறுமை போன்றவைகளை ஏற்படுத்துகிறது.

ஹஜ் கடமையில் ஈடுபடுவோர் 'லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்' என்ற தல்பியாவை முழங்கியவர்களாக ஹஜ்ஜின் சகல கிரியைகளிலும் ஒன்றாகவும் ஒற்றுமையாகவும் ஈடுபடுவது அருளும் பக்தியும் நிறைந்த இனிய காட்சியாகும். உலக முஸ்லிம்களான நாங்கள் அனைவரும் ஒரே கொடியின் கீழ் ஒற்றுமையாக வாழ வேண்டும் என ஹஜ் கிரியைகள் உணர்த்துகின்றன.

**இறைவன் கட்டளைக்கு கீழ்படிதல்**

இந்த தியாகத் திருநாள், தந்தை தனது மகனை 'குர்பான்' செய்வதற்காகவும், மகன் தன்னைத்தானே தியாகம் செய்வதற்காகவும் முன்வந்த தியாகத்தை நினைவுபடுத்திக் கொண்டாடுவதாகும். இப்ராஹீம் (அலை) அவர்களும், அவர்களின் மனைவி ஹாஜரா நாயகி அவர்களும், அவர்களின் அருமை மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களும் செய்த மகத்தான தியாகத்தை இந்தப் பெருநாள் நினைவுபடுத்துகிறது. இப்ராஹீம் (அலை) அவர்கள், தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட கனவொன்று கண்டார்கள். இறைவனின் கட்டளைக்கு கீழ்படியும் வகையில் தனது அன்பு மகனை பலியிட இப்ராஹீம் (அலை) அவர்கள் துணிந்தார்கள். இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது அருமை மகனை அறுத்துப் பலியிட துணிந்த போது, ஒரு ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் செய்தார்கள்.

இந்த தியாகத்தின் உச்ச நிலையை முழு உலகிலும் உள்ள இறையடியார்களுக்கு உணர்த்துவதே குர்பானின் நோக்கமாகும். ஹஜ் பெருநாளின் தார்ப்பரியமும் தியாகத்திலேயே தங்கியுள்ளது. அதனால்தான் இந்த பெருநாள் தியாகப் பெருநாள் எனப் போற்றப்படுகிறது. ஆடுகளையும் மாடுகளையும் 'குர்பானி' கொடுப்பதனால் இந்தப் பெருநாளை கொண்டாடுகின்ற கடமை முடிந்துவிடாது. அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது,

"அவற்றின் இறைச்சியும் அவற்றின் ரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களில் உள்ள இறையச்சம்தான் அவனைச் சென்றடைகிறது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியை காட்டியதற்காக நீங்கள் அவனது பெருமையை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்கு தொண்டு செய்ய வைத்தான்.

நற்செயல் செய்பவர்களுக்கு நீர் நற்கூலி வழங்குவீராக!"

(அல் ஹஜ்: 38-வது வசனம்)

கட்டுரையாளர்:
தாளாளர்
ஜாமிஅத்துல் ஹாஜரா மகளிர் அரபிக் கல்லூரி. திண்டுக்கல்.

### 'இந்து தமிழ் திசை', அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் இணைந்து வழங்கும் 'உயர்வுக்கு உயர்கல்வி'

# அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் மின்னியல், மின்னணு, எரிசக்தி துறைகள்

## ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் துறை வல்லுநர்கள் தகவல்

■ சென்னை

எதிர்காலத்தில் அதிக வேலைவாய்ப்பும், தேவையும் உள்ள படிப்புகளாக மின்னியல், மின்னணு, எரிசக்தி துறைகள் விளங்குகின்றன என்று 'இந்து தமிழ் திசை' நாளிதழ், அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் இணைந்து நடத்தும் 'உயர்வுக்கு உயர்கல்வி' ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பிளஸ் 2 முடித்துள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழும், அம்ரிதா விஷ்வ வித்யாபீடமும் இணைந்து 'உயர்வுக்கு உயர்கல்வி' என்ற தொடர் நிகழ்ச்சியை ஆன்லைனில் நடத்துகின்றன. கடந்த 10–ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சி, இன்னும் 13 நாட்கள் நடக்க உள்ளது. கடந்த 18–ம் தேதி நடந்த 5–வது நிகழ்வில் மின்னியல், மின்னணு, எரிசக்தி துறை படிப்புகள் எனும் தலைப்பில் இத்துறை வல்லுநர்கள் உரையாற்றியதாவது:

**சென்னை அண்ணா பல்கலை. முன்னாள் டீன், சிஇஜி டாக்டர் எஸ். இனியன்:** வாகன உற்பத்தி உள்ளிட்ட எந்த துறையாக இருந்தாலும் மின் பொறியாளர் இன்றி இயங்காது. பெட்ரோல், டீசல் விலை அதிகரித்து வரும் நிலையில், மின்சார வாகனங்களுக்கான சந்தை வேகமாக வளர்ந்து வருகிறது. அதில் மின் பொறியாளர்களின் பங்கு மிக அதிகம். எரிசக்தி அறிவியல் சார்ந்த அனல்மின், நீர்மின், அணுமின் நிலையங்களிலும் மின்பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொட்டிக் கிடக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியம், ரயில்வே, விமான போக்குவரத்து துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மின் பொறியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை வழங்குகின்றன.

மாணவர்கள் 3–ம் ஆண்டு பயிலும்போதே, 'கேட்' தேர்வுக்கு தயாராக வேண்டும். அதன் அடிப்படையிலேயே பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைக்கும். படிக்கும்போதே சிறுசிறு புராஜக்ட்களை மேற்கொள்ள வேண்டும்.

**சென்னை பிஜிஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் உதவி துணைத் தலைவர் (ஹெச் ஆர்) எம்.எஸ்.சுவாமிநாதன்:** ஒரு மின் பொறியாளருக்கு மின்உற்பத்தி, மின்உற்பத்தி கட்டமைப்புகளை ஏற்படுத்துவது, மின்சார வாகனங்கள் உற்பத்தியில் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளன. இந்தியாவில் அடுத்த 4 ஆண்டுகளில் மின்சார தேவை 80 ஆயிரம் மெகாவாட்டாக உயரப்போகிறது. அதனால் மின் உற்பத்தி துறைக்கு ஏராளமான மின்பொறியாளர்கள் தேவைப்படுகின்றனர். மின்சாரத்தில் இயங்கும் கார், இருசக்கர வாகனங்கள் உற்பத்தி அதிகரித்துவருகிறது. அதிலும் மின் பொறியாளர் வேலைவாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. பெட்ரோலிய எண்ணெய், எரிவாயு தொழிற்சாலைகளிலும் மின்பொறியாளர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர்.



▲ எஸ்.இனியன்



▲ எம்.எஸ்.சுவாமிநாதன்



▲ எஸ்.பாலமுருகன்

கல்லூரி இறுதி ஆண்டு புராஜக்ட் செய்யும்போது, ஒரு புரட்சியை ஏற்படுத்தும் விதமானதாக அந்த புராஜக்ட் இருக்க வேண்டும். ஒரு நிறுவனத்தில் பயிற்சி பொறியியல் பட்டதாரியாக சேரும் ஒருவர், தான் கல்லூரியில் படித்த அனைத்து விவரங்களையும் புகுத்தி பணியாற்ற வேண்டும். அப்போதுதான் அவர் அடுத்தடுத்த பணி நிலைகளுக்கு முன்னேற முடியும்.

**கோவை அம்ரிதா ஸ்கூல் ஆஃப் இன்ஜினீயரிங் பேராசிரியர் டாக்டர் எஸ்.பாலமுருகன்:** உலகில் 30 ஆண்டுகளுக்கு பிறகு எல்லா வாகனங்களும் மின்சாரத்தில் இயங்கக் கூடியதாகவே இருக்கும். மருத்துவ பரிசோதனை கருவி, ரோபோ தேவையும் அதிகரித்து வருகிறது. மின் பொறியியல் படிப்பில், எரிசக்தி உற்பத்தி, பகிர்மானம், வீடுகளைச் சென்றடைவது, ஏசி, டிசி மின்சாரத்தில் இயங்கும் மோட்டார்கள், ஜெனரேட்டர், மின்மாற்றிகளின் செயல்பாடுகள் போன்றவை அடிப்படை பாடமாக இருக்கும்.

சூரிய ஒளி மின்சாரத்தை வடங்களில் கொண்டு செல்லுதல், வீடுகளில் உள்ள மின்விசிறி, மின்விளக்கை கைபேசி மூலமாக இயக்க ஒரு ஸ்மார்ட் மீட்டரை கண்டுபிடிக்கும்போது, அதை அமெரிக்காவில் இருந்து ஒருவர் இயக்குவதை தடுத்தல் போன்ற சவால்களுக்கு மின் பொறியாளர்கள் தீர்வு காணலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தொடர்ந்து, பொறியியல் படிப்பு மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் பற்றிய கேள்விகளுக்கு துறை வல்லுநர்கள் விளக்கம் அளித்தனர். இந்த ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியை 'இந்து தமிழ் திசை' நாளிதழின் முதுநிலை துணை ஆசிரியர் மு.முருகேசன் நெறிப்படுத்தினார்.




இந்த நிகழ்ச்சியை சவீதா இன்ஜினீயரிங் காலேஜ், சென்னை இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, ஸ்ரீஈஸ்வர் காலேஜ் ஆஃப் இன்ஜினீயரிங் ஆகியவை இணைந்து வழங்கின. இந்த நிகழ்வில் பங்கேற்கத் தவறியவர்கள் https://www.youtube.com/watch?v=6j5y4YCmQRI என்ற லிங்க்கில் முழு நிகழ்வையும் கண்டு பயன் பெறலாம்.

'உயர்வுக்கு உயர்கல்வி' நிகழ்வில் வரும் வெள்ளிக்கிழமையன்று (ஜூலை 23) சென்னை கிளஸ்டிரக்ஸ் டாடா பிரைவேட் நிறுவனத்தின் நிறுவனர் (அனாலிஸ்டிக்ஸ் & பிளாக்செயின்) வெங்கட் ரமணி, 'கிளவுட் கம்ப்யூட்டிங் – சைபர் செக்யூரிட்டி' படிப்பு குறித்தும், சனிக்கிழமை (ஜூலை 24) நிகழ்வில் ஆந்திராவிலுள்ள 'அல்ஸ்டம்' (ALSTOM) நிறுவனத்தின் குவாலிட்டி டைரக்டர் எஸ்.சண்முகசுந்தரம், 'மெக்கானிக்கல் & ஆட்டோமொபைல்' படிப்பு குறித்தும், ஞாயிற்றுக்கிழமை (ஜூலை–25) நிகழ்வில் மும்பையிலுள்ள ஆங்கிலோ ஈஸ்டன் ஷிப் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் மரைன் மாஸ்டர் கேப்டன் டி.ராமநாதன், 'மரைன் & ஓசோன் இன்ஜினீயரிங்' படிப்பு குறித்தும் ஆலோசனைகளை வழங்கவிருக்கிறார்கள். இந்த ஆன்லைன் நிகழ்வில் பங்கேற்க விரும்புபவர்கள் https:bit.ly/3wxsbK6 என்ற லிங்க்கில் பதிவுசெய்து கொள்ளவும்.



▲ கோயில்களில் விழா கொண்டாட தடை உள்ள நிலையில், ஆடி மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமையான நேற்று மயிலாப்பூர் கோலவிழி அம்மன் கோயிலில் பெண்கள் விளக்கு மட்டும் ஏற்றி அம்மனை வழிபட்டு சென்றனர். படம்: ம.பிரபு

தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெற

# வாழ்நாள் சான்றிதழ் தருவதிலிருந்து விலக்கு

■ சென்னை

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர், அமைப்பு சாரா ஓட்டுநர்கள், தையல் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர் நலவாரியங்களின் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது.

கூட்டத்தில், நலவாரியங்களில் இணையதள பதிவு, புதுப்பிப்பு, ஆதார் இணைப்பு, உதவித்தொகை பெறும்போது ஓடிபி பெறுதல், இணையதள வழிமுறைகளை எளிமைப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்தும் கல்வி, திருமணம், ஓய்வூதியத்தை உயர்த்துதல் குறித்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அமைச்சர் சி.வி.கணேசன் பேசியதாவது:

இந்த அரசு பொறுப்பேற்ற 50 நாட்களில் 50 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு என்ற அடிப்படையில், தொழிலாளர்களின் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.68 கோடியே 27 லட்சத்து 91 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பதிவு புதுப்பித்தல் மற்றும் ஓய்வூதியம் பெறுவதற்கான வாழ்நாள் சான்று சமர்ப்பிக்க விதிவிலக்கு வழங்க வேண்டும் என்ற பல்வேறு தொழிற்சங்கங்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு, உடனடியாக விதிவிலக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் தொழிலாளர் நல ஆணையர் அதுல் ஆனந்த், உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரிய செயலாளர் ஆ.திவ்யநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தூய்மை பணிகளை மாநகராட்சி ஆணையர் ஆய்வு

■ சென்னை

தீவிர தூய்மை பணிகளை சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர தூய்மை பணி திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வியாசர்பாடியில் உள்ள பி.வி.காலனி 26-வது தெருவில் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகளை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி நேற்று ஆய்வு செய்தார்.

இதேபோல், வியாசர்பாடியில் உள்ள பிஎஸ்என்எல் குடியிருப்பு பகுதி, தண்டையார்பேட்டை சுனாமி குடியிருப்பு மற்றும் கொடுங்கையூர் முத்தமிழ் நகர் பகுதிகளில் தூய்மை பணிகளை ஆய்வு செய்தார்.

நேற்றைய தினம் நடந்த தூய்மை பணிகளில் 173 டன் கட்டிட கழிவுகள் மற்றும் குப்பைகளை மாநகராட்சி ஊழியர்கள் அகற்றினர்.

நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட

# செம்மஞ்சேரி காவல் நிலையம் செயல்பட அனுமதிக்க முடியாது

● உயர் நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

நீர்நிலையில் கட்டப்பட்டுள்ள செம்மஞ்சேரி காவல் நிலையத்தை, அங்கு செயல்பட அனுமதிக்க முடியாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அறப்போர் இயக்கம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "காஞ்சிபுரம் மாவட்டம் செம்மஞ்சேரியில் தாமரைக்கேணி என்ற நீர்நிலையை ஆக்கிரமித்து புதிதாக காவல் நிலையம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு சிஎம்டிஏ ஒப்புதல் பெறவில்லை. எனவே செம்மஞ்சேரி காவல் நிலையம் செயல்பட தடை விதிக்க வேண்டும். நீர்நிலையை பழைய நிலைக்கு மாற்ற உத்தரவிட வேண்டும்" என்று கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், இது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய ஐஐடி பேராசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய குழுவை அமைத்து உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஐஐடி ஆய்வுக்குழு சமர்ப்பித்த அறிக்கையில், "புதிய காவல் நிலையத்தை இடிப்பதால் மட்டும் நீர்நிலையை ஒட்டுமொத்தமாக மீட்டு விட முடியாது. ஆக்கிரமிப்பில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் கட்டிடங்களையும் இடித்தால் மட்டுமே அந்த நீர்நிலையை காக்க முடியும்" என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

அதையடுத்து நீதிபதிகள், "நாட்டில் உள்ள நீர்நிலைகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எனவே தமிழக அரசு சம்பந்தப்பட்ட நீர்நிலையை பாதுகாக்க நிபுணர் குழுவை அமைக்க வேண்டும். மிகப்பெரிய அளவில் கட்டுமானங்களை இடிக்காமல், நீர்நிலையை மீட்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து மனுதாரர் மற்றும் ஐஐடி குழுவுடன் அரசு ஆலோசித்து நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

அதேநேரம் அப்பகுதியில் ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் மற்றும் புதிய கட்டுமானங்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. மேலும் நீர்நிலையை ஆக்கிரமித்து புதிதாக கட்டப்பட்டுள்ள செம்மஞ்சேரி காவல் நிலையம் அங்கு செயல்பட அனுமதிக்க முடியாது" என உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

போலீஸாரை உதவிக்கு அழைத்து

# மரத்தில் மாஞ்சா நூலில் சிக்கிய காகத்தை காப்பாற்றிய சிறுவன்

■ சென்னை

சென்னை போரூர் அடுத்த காரம்பாக்கம் அருணாச்சலம் நகர் பகுதியை சேர்ந்த சிறுவன் சஞ்சீவ் (11). ஆறாம் வகுப்பு படிக்கும் இவர், நேற்று காலை யோகா பயிற்சி செய்வதற்காக வீட்டின் மாடிக்கு சென்றுள்ளார்.

அப்போது, வீட்டின் அருகே உள்ள மரத்தில் ஒரு காகம் மாஞ்சா நூலில் சிக்கி நகர முடியாமல் போராடிக் கொண்டிருப்பதை கண்டார். காரம்பாக்கம் போலீஸ் சோதனை சாவடிக்கு ஓடிச் சென்று, மரத்தில் காகம் சிக்கியிருப்பது குறித்து பணியில் இருந்த போலீஸாரிடம் தெரிவித்து, அவர்களை கையோடு அழைத்து வந்தார்.

காகத்தை பார்த்த போலீஸார், ராமாபுரம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், மரத்தில் ஏறி, காகத்தை பத்திரமாக மீட்டனர்.

உரிய நேரத்தில் காவல் துறைக்கு தகவல் கொடுத்து, காகத்தை மீட்க உதவிய சிறுவனை போலீஸார், தீயணைப்பு வீரர்கள், பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

# நடிகை குஷ்புவின் ட்விட்டர் கணக்கு முடக்கம்

● டிஜிபி அலுவலகத்தில் புகார்

■ சென்னை

பாஜகவை சேர்ந்த நடிகை குஷ்புவின் ட்விட்டர் கணக்கை மர்ம நபர்கள் முடக்கியுள்ளனர். இதுகுறித்து டிஜிபி அலுவலகத்தில் குஷ்பு புகார் கொடுத்துள்ளார்.

பாஜகவை சேர்ந்த நடிகை குஷ்புவின் அதிகாரப்பூர்வ ட்விட்டர் கணக்கை 13 லட்சத்துக்கும் அதிகமானோர் பின்தொடர்கின்றனர்.

இந்நிலையில், குஷ்புவின் ட்விட்டர் கணக்கை மர்ம நபர்கள் ஹேக் செய்துள்ளதாக தெரிகிறது. அவரது ட்விட்டர் பக்கத்தில் வெளியாகியிருந்த அனைத்து ட்வீட்களும் அழிக்கப்பட்டுள்ளன. அவரது ஐ.டி. பெயர் 'briann' என மாற்றப்பட்டுள்ளது.



▲ டிஜிபி அலுவலகத்தில் புகார் அளித்தபின் செய்தியாளர்களிடம் பேசிய குஷ்பு. படம்: பு.க.பிரவீன்

தனது ட்விட்டர் கணக்கை முடக்கியவர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னையில் உள்ள டிஜிபி அலுவலகத்தில் குஷ்பு நேற்று மாலையில் புகார் கொடுத்துள்ளார்.

ட்விட்டர் கணக்கு முடக்கம் தொடர்பாக குஷ்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'எனது ட்விட்டர் கணக்கு கடந்த 3 நாட்களுக்கு முன்பு ஹேக் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ட்விட்டர் நிர்வாகத்தை தொடர்பு கொள்ள முயற்சித்து வருகிறோம். கடந்த சில நாட்களாக எனது ட்விட்டர் கணக்கில் பதியப்படும் பதிவுகள் என்னுடையது அல்ல' என்று தெரிவித்துள்ளார். இதுகுறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.



▲ சென்னை நுங்கம்பாக்கம் டிபிஐ வளாகத்தில் உள்ள பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கான சிறப்பு கரோனா பரிசோதனை முகாம் நேற்று நடத்தப்பட்டது. இதனை துணை ஆணையர் (சுகாதாரம்) டாக்டர் மனிஷ் பார்வையிட்டார். படம்: பு.க.பிரவீன்

திமுக இளைஞரணி 41-வது ஆண்டு தொடக்கம்

# உதயநிதி செயல்பாடுகளை கண்டு பெருமை அடைகிறேன்

● முதல்வர் ஸ்டாலின் கருத்து

■ சென்னை

திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினின் செயல்பாடுகளைக் கண்டு பெருமை அடைவதாக அக்கட்சியின் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மொழி காக்க, இனம் உணர்ச்சிபெற, தமிழகம் மேம்பாடு அடைய இயக்கத்தை நோக்கி இளைஞர்கள் ஈர்க்கப்பட வேண்டும் என்பதற்காக கருணாநிதியால் 1980 ஜூலை 20-ம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்காவில் திமுக இளைஞரணி தொடங்கப்பட்டது.

நான் இன்று இந்த மாபெரும் இயக்கத்தின் தலைவனாக, பரந்து விரிந்த தமிழகத்தின் முதல்வராக இருப்பதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது இளைஞரணிதான். என்னை வார்ப்பித்த பாசறைதான் இளைஞரணி.

இந்த நாற்பதாண்டு காலத்தில் திமுகவின் வெற்றிக்கு, தமிழகத்தின் மேன்மைக்கு இளைஞரணி ஆற்றிய பங்களிப்புகள், செய்த சேவைகளை நினைத்துப் பார்க்கும்போது எனக்கே மலைப்பாக இருக்கிறது. திமுகவின் துணை அமைப்பாக மட்டுமில்லாமல், இணையமைப்பாக இளைஞரணி செயல்பட்டு இயக்கத்தின் வெற்றிக்கு அனைத்துத் தேர்தல்களிலும் பணியாற்றியது. அந்த வகையில் வெற்றி அணியாக இளைஞரணி எந்நாளும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இளைஞரணியின் பிறந்தநாளில் இளைஞரணியினர் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞரணியை வழிநடத்தும் பொறுப்பும் கடமையும் தம்பி உதயநிதி ஸ்டாலினுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இளம் வயதிலேயே கட்சிக்காக உழைக்கவும், காலம் பார்க்காமல் செயலாற்றவும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவராக அவர் இருப்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். முன்பைவிட அதிகமான இளைஞர்களை திமுகவை நோக்கி ஈர்த்தும், ஏராளமானவர்களை கட்சி உறுப்பினர்களாக இணைத்தும், அப்படி இணைந்த இளைஞர்களுக்கு கொள்கை வகுப்புகளை நடத்தியும் செயல்பட்டு வருகிறது இளைஞரணி. இந்தச் சிறப்பான பணியை மேற்கொண்டு வரும் இளைஞரணி செயலாளர், துணைச் செயலாளர்கள் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

திமுக அரசின் திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை தமிழகத்தில் உள்ள அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்.

இந்த கரோனா காலத்தில் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், விழாக்கள் நடத்த இயலாது. ஆனாலும் பல்லாயிரக்கணக்கானவர்களை ஈர்க்கும் மாற்று தொழில்நுட்ப வழிமுறைகள் சமூக வலைதளங்களில் கொட்டிக் கிடக்கிறது. இதனை இளைஞரணியினர் பயன்படுத்தி கட்சி வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்.

இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

## பெண் தலைமை காவலரை தாக்கிய இளைஞர் கைது

■ சென்னை

பணியிலிருந்த பெண் தலைமைக் காவலரை தாக்கிய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராயபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருபவர் கல்பனா (45). இவர் நேற்று முன்தினம் ஆர்எஸ்ஆர்எம் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தில் பணியில் இருந்தார். மருத்துவமனைக்கு அருகில் உள்ள அம்மா உணவகத்துக்கு சாப்பிட வந்த இளைஞர் ஒருவர், மது போதையில், மருத்துவமனை நுழைவு வாயிலில் இருந்த காவலாளியிடம் தகராறு செய்துள்ளார்.

இதையடுத்து அந்த இளைஞரைப் பிடித்து தலைமைக் காவலர் கல்பனாவிடம் ஒப்படைத்துள்ளனர். போதையில் இருந்த இளைஞரிடம் கல்பனா விசாரணை செய்துள்ளார். அப்போது அந்த இளைஞர், கல்பனாவை அவதூறாக பேசி பணி செய்யாவிடாமல் இடையூறு செய்துள்ளார். மேலும் தாக்கவும் செய்துள்ளார்.

இதுகுறித்து கல்பனா அளித்த புகாரின் பேரில் விசாரணை நடத்திய ராயபுரம் போலீஸார், மீனாட்சி அம்மன் பேட்டையைச் சேர்ந்த தினேஷ் (23) என்பவரை கைது செய்தனர். விசாரணைக்குப் பிறகு அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

ஆசிரியர் மீதான குண்டர் சட்டத்தை ரத்து செய்யக் கோரி வழக்கு

# காவல் ஆணையர் பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

சென்னை கே.கே.நகரில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர் ராஜகோபாலன், தங்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகவும், ஆன்லைன் வகுப்புகளின்போது அரைகுறை ஆடையுடன் ஆபாசமாக நடந்துகொண்டதாகவும் முன்னாள் மாணவிகள் புகார் அளித்தனர்.

அதன்பேரில் ராஜகோபாலனை அசோக்நகர் போலீஸார் போக்ஸோ சட்டத்தின்கீழ் கடந்த மே மாதம் கைது செய்தனர். பின்னர் அவர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் மீது போடப்பட்டுள்ள குண்டர் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி அவரது மனைவி சுதா, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

'முன்னாள் மாணவி ஒருவர், கடந்த 2015-ம் ஆண்டு எனது கணவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக புகாரில் தெரிவித்துள்ளார். அப்போது ஆன்லைன் வகுப்புகள் கிடையாது. இந்த புகார் நீண்ட காலத்துக்குப் பிறகு தாமதமாக உள்நோக்கத்துடன் அளிக்கப்பட்டுள்ளது. செவிவழி தகவலின் அடிப்படையிலேயே போலீஸார் எனது கணவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். அதன் அடிப்படையில் எனது கணவர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்திருப்பது சட்டவிரோதம் என்பதால் அதை ரத்து செய்ய வேண்டும்' என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், ஆர்.பொங்கியப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இது தொடர்பாக தமிழக அரசு, மாநகர காவல் ஆணையர் மற்றும் சிறைத்துறை ஆகியோர் 4 வாரங்களில் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.




கரோனா கட்டுப்பாடுகளை மீறி

# நடன நிகழ்ச்சி நடத்திய 16 பேர் பிடிபட்டனர்

● பண்ணை வீட்டுக்கு சீல் வைப்பு

■ சென்னை

கரோனா கட்டுப்பாடுகளை மீறி பண்ணை வீட்டில் நடன நிகழ்ச்சி நடத்திய துணை நடிகை உட்பட 16 பேரைப் பிடித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

சென்னை கிழக்கு கடற்கரை சாலை கானத்தூர் ராதா கிருஷ்ணா அவென்யூவில் உள்ள பண்ணை வீடு ஒன்றில் அண்மையில் இரவு மது விருந்து நடைபெற்றுள்ளது. கரோனா விதிகளை மீறி நடந்த இந்த மதுவிருந்து நிகழ்ச்சிக்கு, சென்னையைச் சேர்ந்த துணை நடிகை கவிதாஸ்ரீ, ராமாபுரத்தை சேர்ந்த ஸ்ரீஜித்குமார் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் நடனமாட 10 பெண்களை பணம் கொடுத்து அழைத்து வந்ததும், நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தலா ரூ.5000 வசூலித்ததும் தெரியவந்தது.

இதுபற்றி தகவல் அறிந்த போலீஸார், சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று, அங்கிருந்த ஸ்ரீஜித்குமார் உள்ளிட்ட 16 பேரையும் காவல் நிலையம் அழைத்து வந்து அவர்கள் மீது வழக்கு பதிந்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் மது போதையில் நடன நிகழ்ச்சி நடைபெற்ற பண்ணை வீட்டை கானத்தூர் கிராம நிர்வாக அதிகாரி (விஏஓ) பூட்டி சீல் வைத்துள்ளார்.



**பொன்மொழி**

காதல் என்பது கணநேர உணர்ச்சி அல்ல; காலமெல்லாம் தொடர வேண்டிய அன்புப் பயணம்.

- மாத்யூஸ்

**இணையம்:** இந்தியாவில் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலங்கள், கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், பாரம்பரியம், சம்பிரதாயங்கள், பல்வேறு இடங்களில் நடைபெறும் விழாக்கள், விளையாட்டுகள், அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய வனப்பகுதிகள் குறித்து http://www.walkthroughindia.com இணையதளத்தில் காணலாம்.

**பொதுஅறிவு:** எகிப்து அதிபர் நாசர் 1956 ஜூலையில் சூயஸ் கால்வாயை நாட்டுடைமை ஆக்கினார். பின்னர், இஸ்ரேலுக்கு எதிராக சிரியா, ஜோர்டானுடன் எகிப்து போர்க்கால படைத்திட்ட ஒப்பந்தம் செய்ததால் 1956 அக்.29—ல் இஸ்ரேல்-எகிப்து போர் ஏற்பட்டது. பிரிட்டன், பிரான்ஸ் மறைமுகமாக இஸ்ரேலுக்கு உதவின.

### தொழிற்படிப்பில் 4% மட்டுமே சேர்க்கை பெறுகின்றனர்

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு இடஒதுக்கீடு அவசியம்

● முதல்வரிடம் நீதிபதி முருகேசன் ஆணையம் பரிந்துரை

■ சென்னை

தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று, முதல்வரிடம் அளித்துள்ள அறிக்கையில் நீதிபதி முருகேசன் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

தமிழகத்தில் பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்வி படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை அளவை ஆய்வு செய்து பரிந்துரை வழங்குவற்காக, முன்னாள் நீதிபதி த.முருகேசன் தலைமையில் கடந்த ஜூன் 15-ம் தேதி ஆணையம் அமைக்கப்பட்டது.

அதன்படி, நீதிபதி முருகேசன் தலைமையில் 10 பேர் கொண்ட குழுவினர் கடந்த ஒரு மாதமாக பல்வேறு தரவுகளை ஆய்வு செய்து, 84 பக்க பரிந்துரை அறிக்கையை தயார் செய்தனர்.

இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலினை நீதிபதி முருகேசன் நேற்று மாலை சந்தித்து, அறிக்கையை சமர்ப்பித்தார்.

அதில், தொழிற்கல்வி படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 சதவீதம் வரை தனி இட ஒதுக்கீடு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து ஆய்வுக் குழுவைச் சேர்ந்த சிலர் கூறியதாவது:

கடந்த ஆண்டுகளின் மாணவர் சேர்க்கை விவரங்களை ஆய்வு செய்தபோது, பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்வி படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் 4 சதவீதம் வரையே சேர்க்கை பெற்றுள்ளனர்.

இதை கருத்தில் கொண்டு, தொழிற்படிப்புகளில் தனி இடஒதுக்கீடு வழங்க பரிந்துரை செய்துள்ளோம். அதனுடன், அரசுப்பள்ளிகள் மற்றும் அதில் பயிலும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவது குறித்தும் சில கருத்துகளை முன்வைத்துள்ளோம். விரைவில் முடிவெடுப்பதாக முதல்வர் உறுதி அளித்துள்ளார்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஆணையத்தின் பரிந்துரைப்படி, இந்த கல்வி ஆண்டு முதலே, தொழிற்படிப்புகளில் தனி இட ஒதுக்கீடு அமலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



▲ அதிமுக அவைத் தலைவர் மதுசூதனன் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உடல்நலம் குறித்து விசாரிக்க நேற்று மருத்துவமனைக்கு வந்த அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி. (அடுத்த படம்) ஜெயலலிதாவின் காரில் அதிமுக கொடியுடன் மருத்துவமனைக்கு வந்த சசிகலா. படங்கள்: ம.பிரபு

(C) KSL Media Ltd.

### அதிமுக அவைத் தலைவர் மதுசூதனனுக்கு தீவிர சிகிச்சை

# மருத்துவமனைக்கு வந்த பழனிசாமி, சசிகலா

■ சென்னை

சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அதிமுக அவைத் தலைவர் மதுசூதனனின் உடல்நலம் குறித்து விசாரிக்க அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி வந்தபோது, சசிகலாவும் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

அதிமுக நிறுவனர் எம்ஜிஆர் காலத்தில் இருந்தே அதிமுகவில் அறியப்பட்டவர் இ.மதுசூதனன். அதிமுக அவைத் தலைவராக உள்ளார். சமீபத்தில் கரோனா பாதிப்பு ஏற்பட்டு மீண்டுவந்த அவர், கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் ஓய்வில் இருந்தார். இந்நிலையில், உடல்நலம் பாதிக்கப்பட்டு, மூச்சுத் திணறல் ஏற்பட்டதால், சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் சில நாட்களுக்கு முன்பு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த 19-ம் தேதி மருத்துவமனைக்கு வந்து மதுசூதனன் உடல்நிலை குறித்து விசாரித்தார். தொடர்ந்து, இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி, மருத்துவமனைக்கு நேற்று காலை வந்தார். அவர் மதுசூதனனை பார்த்து, உடன் இருந்தவர்கள், மருத்துவர்களிடம் உடல்நிலை குறித்து விசாரித்தார்.

அப்போது மதுசூதனன் உடல்நலம் குறித்து விசாரிக்க ஜெயலலிதாவின் தோழி சசிகலா வருவதாக தகவல் பரவியது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

**உடனே புறப்பட்ட பழனிசாமி**

இதைத் தொடர்ந்து பழனிசாமி அங்கிருந்து உடனடியாகப் புறப்பட்டு செல்ல, அதேநேரம், சசிகலாவின் கார் மருத்துவமனை வளாகத்துக்குள் நுழைந்தது. ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது பயன்படுத்திய காரில் அதிமுக கொடியுடன் சசிகலா வந்தார்.

அதன்பின், மருத்துவமனையில் இருந்த மதுசூதனன் குடும்பத்தினரை சசிகலா சந்தித்து அவரது உடல்நிலை குறித்து விசாரித்தார். பின்னர் வெளியே வந்த சசிகலா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அதிமுகவிலும், எங்களது குடும்பத்திலும் மதுசூதனன் ஒரு மூத்த சகோதரர். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதைக் கேள்விப்பட்டு, உடல்நலம் விசாரிக்க வந்தேன். அவர் நலம் பெற வேண்டும் என்று வேண்டிக் கோள்கிறேன்.

இவ்வாறு சசிகலா கூறினார்.

தேர்தலில் அதிமுக தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக உள்ள நிலையில், அதிமுகவை கைப்பற்றும் நோக்கில், அதிருப்தி அதிமுக நிர்வாகிகளுடன் சசிகலா தொடர்ந்து தொலைபேசியில் பேசி வருகிறார். கரோனா முடிந்ததும் தொண்டர்களை சந்திப்பேன். அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று நிர்வாகிகளிடம் தெரிவித்து வருகிறார்.

அதேநேரம் சசிகலாவுடன் பேசி வருபவர்களை, அதிமுகவில் இருந்து ஒருங்கிணைப்பாளர்கள் ஓபிஎஸ், பழனிசாமி நீக்கி வருகின்றனர்.

இந்த சூழலில் மதுசூதனனை சசிகலா சந்தித்து நலம் விசாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**காரில் அதிமுக கொடி**

சசிகலா சிறையில் இருந்து விடுதலையாகி சென்னை திரும்பும்போது காரில் அதிமுக கொடி இருந்தது. இதற்கு அப்போது அதிமுக சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று மதுசூதனனை காண வந்தபோதும் சசிகலாவின் காரில் அதிமுக கொடி இருந்தது.

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கூறும்போது, "மதுசூதனனை சசிகலா சந்தித்தது ஆரோக்கியமானது. அதை கொச்சைப்படுத்தக் கூடாது. அதேநேரம், அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டதாக சசிகலா கூறிவிட்டார். அவ்வாறே இருப்பதுதான் சிறந்தது. கட்சிக்கு சம்பந்தம் இல்லாதவர் கொடியை உபயோகிக்க உரிமை இல்லை. அவர் ஜெயலலிதாவின் பெயரை பயன்படுத்துவதும் தவறு" என்றார்.

### ஒரே கடையில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும்

# ரேஷன் ஊழியர்களை இடம் மாற்ற உத்தரவு

■ சென்னை

மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே நியாயவிலைக் கடையில் பணியாற்றுவோரை இடமாற்றம் செய்ய கூட்டுறவுத் துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 34 ஆயிரத்துக்கும் அதிகமான நியாயவிலைக் கடைகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான கடைகள் கூட்டுறவுத் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சண்முக சுந்தரம், அனைத்து மண்டல இணை பதிவாளர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே நியாயவிலைக் கடையில் பணியாளர்கள் பணியாற்ற அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு பணியாற்றுபவர்களை அருகில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மாற்றம் செய்ய வேண்டும். நியாயவிலைக் கடைகளில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் தவிர வெளிநபர்கள் யாரும் பணியாற்றக் கூடாது. அவ்வாறு இருப்பது தெரிய வந்தால், அவர்கள் மீது கைது உள்ளிட்ட குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநபர்களை அனுமதித்து, அவர்களுக்கு துணை போன பணியாளர்கள் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கடல்சார் மீன்வள மசோதாவை தாக்கல் செய்ய வேண்டாம்

● பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

■ சென்னை

மீனவர்கள் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்திய கடல்சார் மீன்வள மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டாம் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமருக்கு அவர் நேற்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள இந்திய கடல்சார் மீன்வள மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், கடலோர மீனவர் சமூகங்களின் நலன்களுக்கு எதிராக உள்ளது. இந்திய அரசியலமைப்பின் 7-வது அட்டவணையின் மாநிலப் பட்டியலின் கீழ் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை மீறும் சில உட்பிரிவுகளை கொண்டுள்ளது.

மத்திய அரசால் முன்மொழியப்பட்டுள்ள மசோதாவில் உள்ள சில பிரிவுகளில், மீனவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்துதல், சிறையில் அடைத்தல், மீனவர்களுக்கு எதிராக வலிய நடவடிக்கைகளை எடுத்தல், கட்டணம், பெரும் அபராதம் விதித்தல் போன்ற உட்பிரிவுகள் உள்ளன. இது பரவலாக எதிர்ப்புகளையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டாம்.

அனைத்து தரப்பு மக்களின் கருத்துகளை பெற்று, மீனவர் நலன் காக்கும் வகையிலும், கடல் வளத்தைக் காக்கும் வகையிலும் புதிய மசோதாவை பின்னர் தாக்கல் செய்யலாம். தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள கடல்சார் மீனவர் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் முயற்சியை தொடர வேண்டாம்.

இவ்வாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### தேர்தலின்போது திமுக அளித்த வாக்குறுதியின்படி

# தமிழகத்தில் மின் கட்டண கணக்கீட்டு முறையை மாதம்தோறும் மேற்கொள்ள வேண்டும்

● முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி வலியுறுத்தல்

■ சென்னை

தமிழகத்தில் மாதம்தோறும் மின்சார கட்டணம் கணக்கீடு செய்யும் தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று அதிமுக முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தேர்தலின்போது, மின்பயன்பாட்டு கணக்கெடுப்பு மாதம் ஒருமுறையாக மாற்றி அமைக்கப்படும் என திமுக வாக்குறுதி அளித்தது. ஆனால், அதை செயல்படுத்தவில்லை.

ஜூலை 1-ம் தேதி எடுக்க வேண்டிய மின் அளவீடு எடுக்கப்படவில்லை. கடந்த 2019-ம் மார்ச் மாத கட்டணத்தை செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைவான மின்சாரத்தை உபயோகப்படுத்தி இருந்தாலும், அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதிகப்படியான கட்டணத்தால் பெண் தற்கொலை முயற்சி என்ற செய்திகள் வருகின்றன. குத்துமதிப்பாக கணக்கிட்டு ஆன்லைனில் கட்டணம் அனுப்பப்படுகிறது. இதை வைத்து அதிக மின்சாரம் பயன்படுத்தியதாக டெபாசிட் உயர்த்தப்படுவதாக நோட்டீஸ் அனுப்புகின்றனர் என செய்திகள் கூறுகின்றன.

2 மாத திமுக ஆட்சி மீண்டும் மக்களை இருளில் தள்ளியுள்ளது. மின்மிகை மாநிலமாக இருந்த தமிழகத்தில் செயற்கையான மின்வெட்டை ஏற்படுத்துகின்றனரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

**மின்சாரம் இல்லாமல் அவதி**

கடந்த சில நாட்களாக மதுரை உள்ளிட்ட பல மாவட்டங்களில் பகலிலும், இரவிலும் பல மணி நேரம் மின்சாரம் இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். தமிழகத்தில் மின் கட்டணமும் தற்போது 2 முதல் 3 மடங்கு வரை அதிகமாக வசூலிக்கப்படுகிறது.

ஊரடங்கு காலத்தில் மக்கள் உரிய வருமானம் இல்லாமல் தவித்து வரும் சூழலில், இதுபோன்ற பொருளாதார சுமையை ஏற்படுத்துவது, மக்களை பாதிப்படையச் செய்துள்ளது.

மின்வாரியத்தின் இத்தகைய நிர்வாகத் திறனற்ற செயல்களை வன்மையாக கண்டிக்கிறேன். உரிய கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மூலம் இதற்கு தீர்வு காண வேண்டும்.

மாதம் ஒருமுறை மின்சாரம் கணக்கெடுக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதிப்படி ஆகஸ்ட் மாதம் முதல், மீட்டர் கணக்கீடு எடுக்க அரசு உத்தரவிட வேண்டும். இல்லாவிட்டால், அதிக கட்டண சுமையால் தவிக்கும் மக்களின் கோபத்துக்கு அரசு ஆளாக நேரிடும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்,**

மேல்மலையனூர் நகர் (ம) வட்டம், விழுப்புரம் மாவட்டம்

**திருக்கோயிலில் தூய்மைப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**

**ந.க.எண். 543/2021/அ1/ நாள் : 20.07.2021**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் நகர் (ம) வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் அனுபவத்தில் இருந்து வரும் இடங்கள் மற்றும் திருக்கோயில் உள்பிரகாரம், வெளிப்பிரகாரம், தங்கும் விடுதிகள், முடிக்காணிக்கை மண்டபங்கள், கழிவறைகள் (ம) குளியலறைகள், வணிக வளாகம், கடைகள், மயானப்பகுதி, தேரோடும் வீதி, புதிய அலுவலகம், புதிய பேருந்து நிலையம், கழிவறைகள், சேவார்த்திகள் தங்கும் செட்டுகள் ஆகிய இடங்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ள முன் அனுபவமும், முன் தகுதியும் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தக் காலம் | ஆணையர் உத்தரவு வழங்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் (ஒப்பந்தக் காலம் எந்த நேரத்திலும் நிர்வாகத்தால் காலக்குறைவு செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு) |
| 2. | ஒப்பந்தப்படிவம் வழங்கும் நாள் | **05.08.2021** முதல் **11.08.2021** முடிய அலுவலக வேலை நாட்களில் மட்டும் |
| 3. | ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | **11.08.2021 பிற்பகல் 5.30 மணி** |
| 4. | ஒப்பந்தப்புள்ளி வரவேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | **12.08.2021 பிற்பகல் 1.00 மணி** |
| 5. | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் (ம) நேரம் | **12.08.2021 பிற்பகல் 2.00 மணி** |
| 6. | ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை | ரூ. 3,00,000/– |
| 7. | ஒப்பந்தப்புள்ளி படிவம் ஒன்றின் விலை | ரூ.10,000/– |

1) ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் என்ற பெயரில் மாற்றத்தக்கதாக கேட்பு வரைவோலையாக எடுத்து ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து செலுத்தப்பட வேண்டும்.
2) ஒப்பந்தப்புள்ளி பெற விரும்புவோர் இணையதள வாயிலாக www.tenders.tn.gov.in என்ற முகவரியிலும் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். 3) இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

திரு. எஸ். செந்தில் குமார் பூசாரி, அறங்காவலர்
திரு. ஏ. தேவராஜ் பூசாரி, அறங்காவலர்
திரு. ஆர். ராமலிங்கம் பூசாரி, அறங்காவலர்
திரு. சி. செல்வம் பூசாரி, அறங்காவலர்
திரு. எம். சரவணன் பூசாரி, அறங்காவலர்
திரு. ஆர்.எம். வடிவேல் பூசாரி, அறங்காவலர்
திரு. வி. சந்தானம் பூசாரி, அறங்காவலர்

திரு.க. ராமு, பி.ஏ.,பி.எல்.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

செ.ம.தொ.இ./ 2176 /ஒப்பந்தப்புள்ளி/2021



**ஈரோடு மாநகராட்சி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ந.க. எண். எச்2 / 4216 / 2014** **நாள் : 20.07.2021**

ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் **NULM 2020-21 –** திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் பணிக்கு E-Tendering மற்றும் மூடி முத்திரையிட்ட முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. **பணியின் எண்ணிக்கை – 1,** இந்த பணியின் மொத்த மதிப்பீடு **ரூ. 75.68 இலட்சம்.** ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **https://tntenders.gov.in** மற்றும் **https://tenders.tn.gov.in** என்ற இணையதளங்களில் மட்டும் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களையும் **(E-Mail id: commr.erode@tn.gov.in Phone No.: 0424-2251616)** என்ற முகவரியில் பெறலாம்.

**ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்:**

அ) ஒப்பந்தப்புள்ளி குறித்த முன் கலந்தாய்வு : 30.07.2021 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி இறக்கம் செய்தல் : 23.07.2021 முதல் 09.08.2021 வரை (3.00 P.M.)
இ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 09.08.2021 மாலை 3.00 மணி வரை
ஈ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : **10.08.2021 மாலை 3.30 மணி**

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

**ஆணையாளர்,**
**ஈரோடு மாநகராட்சி.**

**செ.ம.தொ.இ/2186/ஒப்பந்தப்புள்ளி/2021**


## 1,904 பேருக்கு கரோனா: 8.60 லட்சம் தடுப்பூசி வருகை

■ சென்னை

புனேவில் இருந்து சென்னைக்கு 8.60 லட்சம் கோவிஷீல்டு தடுப்பூசிகள் வந்துள்ளன.

தமிழகத்துக்கு இதுவரை வந்துள்ள 1.80 கோடி தடுப்பூசிகளில் சில ஆயிரம் எண்ணிக்கையிலான தடுப்பூசிகள் மட்டுமே கையிருப்பில் உள்ளன. பல மையங்களில் தடுப்பூசிகள் கையிருப்பில் இல்லை.இதனால் தடுப்பூசி போட்டுக்கொள்ள ஆர்வத்துடன் வரும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இந்நிலையில், மகாராஷ்டிர மாநிலம் புனேவில் இருந்து 5 லட்சம் கோவிஷீல்டு தடுப்பூசிகள் நேற்று சென்னைக்கு வந்தன. விமான நிலையத்தில் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட சுகாதாரத் துறை அதிகாரிகள் குளிர்சாதன வாகனங்கள் மூலம் தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள மாநில மருந்து சேமிப்பு கிடங்குக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து அவற்றை மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பினர். இதேபோல், சென்னை வந்த 3.60 லட்சம் கோவிஷீல்டு தடுப்பூசிகள் பெரியமேட்டில் உள்ள மத்திய அரசின் மருந்து கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டது.

**30 பேர் உயிரிழப்பு**

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 1,094, பெண்கள் 810 என மொத்தம் 1,904 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். இதன்மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 25 லட்சத்து 39,277 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 24 லட்சத்து 78,773 பேர் குணமடைந்துள்ளனர். 26,717 பேர் சிகிச்சையில் உள்ளனர். அரசு, தனியார் மருத்துவமனைகளில் நேற்று நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர் என்று தமிழக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

### ஜெயலலிதா பல்கலை.யில் பணியிடங்களை நிரப்பக் கோரி

# முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் வழக்கு

● அதிமுக ஆட்சியில் பணிகள் நடக்கவில்லை என பொன்முடி விளக்கம்

■ சென்னை

ஜெயலலிதா பல்கலைக்கழகத்துக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து பதிவாளர் உள்ளிட்ட பணியிடங்களை உடனடியாக நிரப்பக் கோரி முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளார்.

இதுதொடர்பாக முன்னாள் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில் கூறியிருப்பதாவது:

வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை இரண்டாக பிரித்து விழுப்புரத்தை தலையிடமாகக் கொண்டு கடந்த அதிமுக ஆட்சியில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகம் கடந்த 2020 செப்.16 அன்று புதிதாக சட்டம் இயற்றப்பட்டு உருவாக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் துணைவேந்தர் நியமிக்கப்பட்டு, விழுப்புரம் மாவட்டம் செம்மேடு கிராமத்தில் சுமார் 70 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

ஆனால், இன்னும் கட்டுமானப் பணிகள் தொடங்காததால் பல்கலைக்கழகம் இன்னும் பழைய தாலுகா அலுவலகத்திலேயே ஊழியர்கள் இன்றி செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அதன் முதுகலை மையத்தில், முதுகலை படிப்பில் சேர விண்ணப்பங்களை வரவேற்று அறிவிப்பு வெளியிட்டது சட்டவிரோதம்.

விழுப்புரத்தில் ஜெயலலிதா பல்கலைக்கழகம் இயங்கும்போது திருவள்ளுவர் பல்கலைக்கழகம் முன்புபோல விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் மாணவர் சேர்க்கை நடத்த முடியாது. எனவே, டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகம் சுமுகமான முறையில் இயங்க தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய உயர்கல்வித் துறை செயலாளருக்கு உத்தரவிட வேண்டும். பல்கலைக்கழகத்துக்கு உடனடியாக பதிவாளரை நியமிக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கோரியுள்ளார். தலைமை நீதிபதி அமர்வில் இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

**அமைச்சர் விளக்கம்**

இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஜெயலலிதா பல்கலைக்கழகம் தொடர்பாக விழுப்புரத்தில் எந்த பணியையும் அதிமுக அரசு செய்யவில்லை. பெயர் அளவில் மட்டும் தான் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அதற்கான நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை.

அதேபோல, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரி பல்கலையைத் தன்னாட்சி அங்கீகாரத்தில் இருந்து இணைப்பு அங்கீகாரமாகப் பெறும் பல்கலைக்கழகமாக மாற்றவேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். தற்போது அண்ணாமலை பல்கலைக்கழகமும் கடுமையான நிதி சுமையில் உள்ளது. எனவே, அதை இணைப்பு அங்கீகாரம் பெற்று பல்கலைக்கழகமாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. அதன் கீழ் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மாவட்டத்தில் இயங்கும் கல்லூரிகளை இணைக்க உள்ளோம்.

ஜெயலலிதா பல்கலைக்கழகத்துக்கு ஒரு சிறிய பணியைக்கூட கடந்த அரசு செய்யவில்லை. இது தொடர்பான வழக்கில் தமிழக அரசு இந்த விளக்கத்தைத்தான் தெரிவிக்கும்.

இவ்வாறு அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.


**PUBLIC NOTICE**

The public in general and film trade in particular are hereby requested to take note that our clients are in the process of acquiring the following rights (a) All Linear Rights for distribution and redistribution via any and all means including but not limited to through satellite, cable, DTH, IPTV, terrestrial, internet, mobile etc. as more particularly mentioned in the table hereinbelow, (b) Catch up TV rights (c) Syndication Rights, (d) Sub-tiling rights in all languages (save and except movie 100 mentioned under Sr no. 3 for which subtitling shall be in English language only) (e) All other rights not specifically mentioned herein(collectively referred to as the "Rights"): for multiple telecasts for the territory of the entire world for perpetual term commencing from the Start Date for the Films as detailed hereinbelow:

| Sr. No | Film(s) | Star Cast | Language Granted | Exclusivity | Term |
|---|---|---|---|---|---|
| 1 | Annmariya | Sara Arjun, Sunny Wayne, Dulquer Salmaan & others | Tamil (dubbed) | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | 12th July 2021 - Perpetuity |
| 2 | Style | Unni Mukundan, Tovino Thomas, Priyanka Kandwal & others | Tamil (dubbed) | Exclusive - for India, and Non-India, and Non-of the world | 12th July2021 - Perpetuity |
| 3 | 100 | Atharvaa, Hansika Motwani, Radha Ravi & others | Tamil | Exclusive - for India, and Non-India, and Non-of the world | 1st August 2021 - Perpetuity |

The Film(s) are free from any encumbrances, claims or demands, whatsoever. However, should any person(s) have claim against, to, or in respect of any of the Film(s) mentioned hereinabove whether by way of any sale, license, assignment or otherwise, such person(s) are hereby required to make the same known in writing to us at our office at **B-116, Mittal Towers, Nariman Point, Mumbai - 400 021,** within ten (10) days from the date of publication hereof, failing which the transaction will be completed without reference to such claim and the same, if any, will be deemed to have been waived.

Place: Mumbai
Date: 21st July 2021

From:
Naik Naik & Co., B-116, Mittal Towers,
Nariman Point, Mumbai - 400 021.

# திருவள்ளூர் மாவட்டத்தில் மக்களுக்கான உதவி மையம் திறப்பு

● கட்டணமில்லா தொலைபேசி, வாட்ஸ்-அப்பில் புகார் தரலாம்

■ திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் பொது மக்களுக்கான உதவி மையத்தை மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் தொடங்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்ட பொது மக்களுக்காக மாவட்ட உதவி மையம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தை நேற்று முன்தினம் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் தொடங்கி வைத்ததோடு, மையத்தை தொடர்பு கொள்வதற்கான கட்டணமில்லா தொலைபேசி, வாட்ஸ்-அப் எண்களையும் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மீனா பிரியதர்ஷினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வித்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்வின் போது மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் வசிக்கும் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட உதவி மையம் வாரத்தில் 7 நாட்களிலும், 24 மணி நேரமும் செயல்படும். இம்மையத்தை பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 18005997626, வாட்ஸ்-அப் எண் 98403 27626 ஆகியவற்றில் தொடர்பு கொண்டு, தங்களது அனைத்து வகையான புகார், கோரிக்கைகள் குறித்து தெரிவிக்கலாம்.

அவ்வாறு தெரிவிக்கப்படும் கோரிக்கை, புகார்கள் மீது சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக விசாரணை செய்து, விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட உதவி மையம் தொடர்பான விளம்பர பலகைகள் பல்வேறு அரசு அலுவலகங்களில் வைக்கப்படும் என்றார்.



▲ பொதுமக்களுக்காக, திருவள்ளூர் ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட உதவி மையத்தை ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் தொடங்கி வைத்து, கட்டணமில்லா தொலைபேசி, வாட்ஸ்-அப் எண்களையும் வெளியிட்டார்.

## சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கத்தில் நாளை மின்தடை

■ மேடவாக்கம்

பெரும்பாக்கத்தில் உள்ள 110 கிலோ வாட் கொண்ட துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக நாளை (ஜூலை 22) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின்தடை செய்யப்படும்.

மின்தடை ஏற்படும் பகுதிகள் விவரம்:

சித்தாலப்பாக்கம், வரதராஜ பெருமாள் கோயில் தெரு, ஏஜிபி அவென்யு, வெண்பா அவென்யு, கன்னி கோயில் தெரு, எம்ஜிஆர் நகர், பாரதி அவென்யு, நுக்கம்பாளையம் மெயின் ரோடு, விவேகானந்தா நகர், ஜெயா நகர், வள்ளுவர் நகர், அரசங்கழனி மெயின் ரோடு, சங்கராபுரம் மகாலட்சுமி நகர், ஒட்டியம்பாக்கம் கிராமம் போன்ற பகுதிகளில் மின்தடை இருக்கும் என்று பெரும்பாக்கம் துணை மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## குன்றத்தூர் ஒன்றிய ஊராட்சிகளில்

# வளர்ச்சி பணிகளை அமைச்சர்கள் ஆய்வு

■ படப்பை

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கரசங்கால், செரப்பணஞ்சேரி ஊராட்சிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், ஊரக தொழில் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, கரசங்கால் ஊராட்சியில் நாற்றங்கால் பண்ணையில் மரக்கன்று உற்பத்தி, மண்புழு, இயற்கை உரம் தயாரித்தல் போன்ற பணிகளை ஆய்வு செய்தார். தொடர்ந்து நாற்றங்கால் பண்ணையில் அமைச்சர்கள் மரக்கன்றை நட்டு வைத்தனர். பின்னர், கரசங்கால் ஊராட்சியில் உள்ள சமத்துவபுரத்தில் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர், செரப்பணஞ்சேரி ஊராட்சியில் ஜல் ஜீவன் திட்டத்தில் தொடங்கப்பட்ட குடிநீர் மேல்நிலை தொட்டியை மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கிவைத்து, வீடுகளுக்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை ஆய்வு செய்து, ஜல் ஜீவன் திட்டத்துக்காக அமைக்கப்பட்ட கிணற்றையும் ஆய்வு செய்தார்.

பின்னர் ரூ.4 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் 1,740 மரக்கன்றுகள் நடப்பட்டு உருவாக்கப்பட்ட அடர் காடுகள் வளர்ப்பு திட்டத்தை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் ஆர்த்தி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் ஜெயசுதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீனிவாசன், தினகரன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.



▲ காஞ்சிபுரம் மாவட்டம், சமத்துவபுரம், செரப்பணஞ்சேரி பகுதிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சிப் பணிகளை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியகருப்பன் நேற்று ஆய்வு செய்து அங்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்தார். ஊரக தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சியர் ஆர்த்தி மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர். படம்: எம்.முத்துகணேஷ்

# மாமல்லபுரம் பேரூராட்சியில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

● அங்கீகாரமில்லா கட்டிடத்தை இடிக்க அறிவுரை

■ மாமல்லபுரம்

மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் பல்வேறு நிர்வாகப் பணிகள் குறித்து ஆய்வு செய்த ஆட்சியர் ராகுல்நாத், அங்கீகாரம் பெறாத சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சுற்றுலா பயணிகளின் வசதிகளுக்காக ஏராளமான தனியார் சொகுசு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விடுதிகள் மற்றும் குடியிருப்புகளுக்கு பேரூராட்சி நிர்வாகம் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கியுள்ளது.

இந்நிலையில், பேரூராட்சி நிர்வாகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் தொடர்பாக, பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் ராகுல்நாத் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பாதாள சாக்கடை இணைப்புகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது, சில கட்டிடங்களுக்கு இணைப்பு வழங்கவில்லை; விதிகளை மீறி கட்டப்பட்டதே அதற்கு காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, அங்கீகாரம் பெறாத கட்டிடங்களை இடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். பின்னர் பூஞ்சேரி பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தை பார்வையிட்ட ஆட்சியர், தூய்மைப் பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் வில்லியம்ஸ் ஏசுதாஸ், செயல் அலுவலர் (பொறுப்பு) கணேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## நங்கநல்லூரில் அரசு அதிகாரி வீட்டில் 35 பவுன் திருட்டு

■ ஆலந்தூர்

சென்னை நங்கநல்லூர் அய்யப்பன் நகரை சேர்ந்தவர் ஸ்ரீதர் (61) தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்றவர். இவர் நேற்று காலை வீட்டைப் பூட்டிவிட்டு குடும்பத்துடன் அண்ணாநகரில் உள்ள மைத்துனர் மகனின் பிறந்தநாள் விழாவுக்கு சென்றுள்ளார். மீண்டும் இரவு 11 மணிக்கு திரும்பி வந்தபோது இரும்புக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது.

பின்னர், உள்ளே சென்று பார்த்த போது 2 பீரோவும் உடைக்கப்பட்டு அதில் இருந்த 35 பவுன் நகைகள், 2 கிலோ வெள்ளிப் பொருட்கள், ரூ.65 ஆயிரம் ரொக்கம் ஆகியவை திருடப்பட்டு இருந்தன.

இதுகுறித்து ஸ்ரீதர் பழவந்தாங்கல் போலீஸில் புகார் அளித்துள்ளார். போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் வார்டு வாரியாக

# வாக்காளர் பட்டியல் பிரிக்கும் பணி

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட உள்ளதையொட்டி வார்டு வாரியாக வாக்காளர் பட்டியலை பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் புதிதாக பிரிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் நடைபெறவில்லை. இந்த மாவட்டங்களில் செப்டம்பர் 15-க்குள் உள்ளாட்சி தேர்தலை நடத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏற்கெனவே சட்டமன்றத் தேர்தலுக்காக தயாரான வாக்காளர் பட்டியலை, உள்ளாட்சி தேர்தலுக்கு தகுந்தவாறு வார்டு வாரியாக பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 11 மாவட்ட கவுன்சிலர்கள், 98 ஒன்றியக் கவுன்சிலர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1,938 கிராம வார்டு உறுப்பினர்கள், 5 ஊராட்சி ஒன்றியங்கள், 274 கிராம ஊராட்சிகள், ஒரு நகராட்சி, 51 நகராட்சி வார்டுகள், 5 பேரூராட்சி, 84 பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு தகுந்தாற்போல் வாக்காளர் பட்டியல் பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வாக்காளர் பட்டியல் பிரிக்கப்பட்டு அவை வெளியிடப்பட்ட பின்பு உள்ளாட்சி தேர்தலுக்கான அறிவிப்புகள் வெளியாகலாம் என்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## கூடுவாஞ்சேரியில் பேரூராட்சிக்கு சொந்தமான

# ரூ.18 கோடி பூங்கா நிலம் மீட்பு

■ வண்டலூர்

நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் 3.99 ஏக்கர் பரப்பளவில் 1988-ம் ஆண்டு என்.பி.ஆர். நகர் என்ற பெயரில் வீட்டுமனை அமைக்கப்பட்டது. இந்த வீட்டு மனையில் 4 இடங்களில் சுமார் 16,600 சதுர அடி நிலத்தை (38 சென்ட்) பேரூராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஆனால், இந்த மனைப்பிரிவை அமைத்தவர் நிலத்தை பேரூராட்சிக்கு வழங்காமல், தனது கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து பயன்படுத்தி வந்தார். இந்நிலையில் அந்த இடத்தை விற்பனை செய்ய இருப்பதாக ஏராளமான புகார்கள் வந்தன. இதனையடுத்து, அரசுக்கு சொந்தமான இடங்களை மீட்கும்படி பேரூராட்சிக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது.

அதன்படி பேரூராட்சி செயலாளர் வெங்கடேசன் ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பேரூராட்சிக்கு சொந்தமான நிலங்களை ஒப்படைக்கும்படி எச்சரிக்கை விடுத்தார். இதையடுத்து அந்த நிலங்கள் பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டன. மீட்கப்பட்ட நிலத்தின் சந்தை மதிப்பு ரூ.18 கோடி இருக்கும் என்று கூறப்படுகிறது.

கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் ஆவணங்களின் அடிப்படையில் மொத்தம் 46 பூங்காக்கள் உள்ளன. அனைத்து பூங்காக்களில் நிலை குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, ஆக்கிரமிப்பு இருக்கும் பட்சத்தில் அவை அகற்றப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே மகாலட்சுமி நகர் பூங்காவை பராமரிக்க சில தனியார் அமைப்புகள் கடந்த 2018-19-ம் ஆண்டில் பேரூராட்சி அனுமதி பெற்று, சொந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வந்ததாக மகாலட்சுமி நகர் சங்கத்தினர் புகார் அளித்ததன் பேரில் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

## கோவிலம்பாக்கத்தில் அதிமுக சார்பில்

# உள்ளாட்சித் தேர்தல் ஆலோசனைக் கூட்டம்

■ மேடவாக்கம்

சோழிங்கநல்லூர் சட்டப்பேரவை தொகுதி, பரங்கிமலை கிழக்கு ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஊராட்சி நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அதிமுக இலக்கிய அணி செயலாளர் பா.வளர்மதி பங்கேற்று உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்து விளக்கி பேசினார்.

நிகழ்ச்சியில் சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் கே.பி.கந்தன், அம்மா பேரவை துணை செயலாளரும், ஒன்றிய செயலாளருமான பெரும்பாக்கம் இ.ராஜசேகர், மாணவரணி மாநில துணை செயலாளர் சி.மணிமாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக வெற்றி பெற அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். ஒரே வார்டில் பலர் போட்டியிடாமல் ஒற்றுமையுடன் செயல்பட்டு கழகத்தின் சார்பில் அறிவிக்கும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். ஆட்சி இல்லையே என்று எண்ணி இருக்காமல், மக்கள் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் உடனடியாக அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.



▲ உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகிறார் அதிமுக இலக்கிய அணி செயலாளர் பா.வளர்மதி.



▸▸ கரோனா தொற்றுக்கு சிறப்பான மருத்துவ சேவை அளித்து வருவதற்காக எஸ்ஆர்எம் குழும தலைவர் மற்றும் எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் இணைவேந்தர் ரவி பச்சமுத்துவுக்கு மறைமலை நகர் ரோட்டரி சங்கம் சார்பில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டது. மறைமலை நகர் ரோட்டரி சங்க தலைவர் பி.ஏ.இளங்கோவன், ரோட்டரி மாவட்டம் 3231-ன் முன்னாள் ஆளுநர் பாபு பேரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# குழந்தைகள் இல்லத்தில் வேலை

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மா.ஆர்த்தி வெளியிட்ட அறிக்கை:

காஞ்சிபுரம் அரசு குழந்தைகள் இல்லத்தில் ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க 3 பணியிடங்கள் மதிப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 20 வயது முதல் 40 வயதுக்கு உள்பட்டவராக இருக்க வேண்டும்.

இவர்களது விண்ணப்பங்களை அனைத்து சான்றிதழ் நகல்களுடன் வரும் ஜூலை 28-ம் தேதி 5.30 மணிக்குள் கண்காணிப்பாளர், அரசு குழந்தைகள் இல்லம், எண்.31, சி, தாத்திமேடு, சாலபோகம் தெரு, காஞ்சிபுரம் 631 502. என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். தகுதியான நபர்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வல்லுநர்களைக் கொண்ட தேர்வுக் குழு மூலம் பரிசீலிக்கப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு மதிப்பூதியமாக 2 நாட்களுக்கு ஒருமுறை நாளொன்றுக்கு ரூ.500 மட்டும் வழங்கப்படும். இந்தப் பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது என்று தெரிவித்துள்ளார்.


# வரி விளம்பரங்கள்

### சுய செய்தி

#### பெயர் மாற்றம்

I SOWNDARYA Radhakrishnan W/O, Madhankumar R/o Plot#r2 Door# 4/56, Pesil Blue, Pesil Garden, Irandamkattalai, Kovur, Chennai - 600128 have changed my name to Sowndarya Madhankumar

I, MOHAMED MARAICAR NAZEER AHAMED holder of Indian Passport No:Z2422733 issued at DUBAI on 06/12/2012 and Permanent Resident of 18/47 MOSQUE STREET CUDDALORE OLD TOWN TAMIL NADU and presently Residing at 805A AL AZIZIYA BLDG AL WAHDA RD SHARJAH do hereby change my name from MOHAMED MARAICAR NAZEER AHAMED to NAZEER AHAMED with immediate effect.

### திருமண சேவை மையம்




### திருமண சேவை மையம்

1000 DAYS Validity + Free Benefits One Time Regn. Fees Rs.1000. brahminkalyanam.com, bkmatrimony.com. 89397 02500

### பொது

#### பொது அறிவிப்பு

IN THE COURT OF THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, AT BANGALORE

M.V.C. No. 3343/2020 (SCCH-24)

Between : Pranith Sai .S ...Petitioner

AND:

Bullet trans Sollutions Pvt. Ltd. and others ...Respondents

NOTICE TO RESPONDENTS No. 1

Bullet Trans Sollutions Pvt. Ltd., No.04, Near Car Street, Ponneri, Thiruvallur, Tamilunadu-601204 (RC owner of Eicher Container No. TN-18-AU-0345)

Whereas, the above claim petition is filed by the Petitioner against You and Iffco Tokia General Insurance Company Limited and You for seeking compensation for a sum of Rs. 10,00,000/- on account of the injuries sustained in the Road Traffic Accident that occurred on 25-08-2020 at about 11.00 a.m. Petitioner was a carefully standing on The footpath along with other persons with care and following all traffic rules and regulations, near infosity-1 gate, KV Narayana Layout, Ragunathapura, KasabaHobli, Doddaballapura Taluk, Bangalore Dist. At that time driver of the Eicher Container No. TN-18-AU-0345 came at very high speed in a rash and negligent manner and dashed against the petitioner and caused the accident.

You are hereby summoned to appear in this court in person or pleader duly instructed **on 09.09.2021 at 11-00 AM** to answer the claim petition.

Take notice that in default of your appearance on the said date, the same will be heard and determined in your absence.

Given under my hand and seal of the court on 16.7.2021.

**By order of the Court, Assistant Registrar, Court of Small Causes, Bangalore.**

Advocate for Petitioner : **Vinoda B.C.,** Advocate, No. 20/1, 19th Cross, Ittamadu, BSK 3rd Stage, Bangalore - 560 085.






# இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்

(CIN: L72900TN2011PLC080183)

பதிவு அலுவலகம் : 244, அண்ணா சாலை, சென்னை 600 006.
தலைமை அலுவலகம் : ப்ளாட் எண்.3/G-3, சிப்காட் IT பார்க், சிறுசேரி, சென்னை 600 130.
மின்னஞ்சல் : shareholder.query@intellectdesign.com, company.secretary@intellectdesign.com
இணையதளம் : www.intellectdesign.com தொலைபேசி : 044-6700 8000 ஃபேக்ஸ் : 044-6700 8874

**இன்டெலக்ட் டிசைன் அரினா நிறுவனத்தின் 10வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் பேச்சாளர் முன்பதிவு**

இன்டெலக்ட் டிசைன் அரினா நிறுவனத்தின் 10வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), புதன்கிழமை, ஆகஸ்ட் 04, 2021 அன்று இந்திய நேரம் காலை 11.00 மணிக்கு, வீடியோ–கான்ஃபெரன்சிங் அல்லது பிற ஆடியோ–காட்சி (VC/OAVM) வழிமுறைகள் மூலம் பல்வேறு MCA மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப நடைபெறுவதற்கான அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இக் கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை, நிறுவனம்/RTA/டெபாசிட்டரியில் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

10வது AGM அறிவிப்பு மற்றும் 2020–21 நிதியாண்டிற்கான ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளத்திலும், அதாவது, https://www.intellectdesign.com/investor-relations/, பங்குச் சந்தை இணையதளங்களான www.bseindia.com, www.nseindia.com மற்றும் டெபாசிட்டரி இணையதளமான https://www.evoting.nsdl.com/லும் கிடைக்கப்பெறும்.

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 91 மற்றும் செபி பட்டியல் ஒழுங்குமுறைகள், 2015, ஒழுங்குமுறை 42–ன்படி, உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள், வெள்ளிக்கிழமை, 23 ஜூலை 2021 முதல் புதன்கிழமை, 04 ஆகஸ்ட் 2021 வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

இறுதி தேதியான, புதன்கிழமை, 28 ஜூலை 2021 அன்று நேரடி அல்லது டீமெட்டீரியலைஸ்டு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். மின்னணு–வாக்களிப்பு முறை அதன் பின்னர் வாக்களிக்க NSDL–ஆல் செலிழக்கச் செய்யப்படும். VC/OAVM வசதி மூலம் AGM–ல் பங்கு பெருபவர்கள் மற்றும் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காத, அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாத உறுப்பினர்கள், AGM–ல் மின்னணு–வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்களாவர்.

தொலைதூர மின்னணு–வாக்களிப்பு, ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 21, 2021 இந்திய நேரம் காலை 09.00 மணி முதல் தொடங்கி செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 03, 2021 அன்று மாலை 05.00 மணிக்கு முடிவடையும். ஆகஸ்ட் 03, 2021 அன்று மாலை 05.00 மணிக்கு மேல் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு அனுமதிக்கப்படாது, மேலும் ஒரு தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு உறுப்பினரால் வழங்கப்பட்டவுடன், அதை மாற்றவும் அனுமதிக்கப்படாது.

தொலைதூர மின்னணு–வாக்களிப்பின் மூலம் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர்கள் 10வது AGM நடவடிக்கைகளில் பங்கேற்கலாம், ஆனால் AGM போது அவர்களுக்கு வாக்களிக்க உரிமை இல்லை.

VC/OAVM மூலம் பங்கேற்பதற்கான விரிவான வழிமுறைகள் 10வது AGM அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் பேச்சாளராக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த / கேள்விகளைக் கேட்க விரும்பும் உறுப்பினர்கள் தங்கள் பெயர்கள், டிபி ஐடி மற்றும் கிளையண்ட் ஐடி/ஃபோலியோ எண்., PAN மற்றும் மொபைல் எண்ணைக் குறிப்பிட்டு, பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியிலிருந்து ஒரு கோரிக்கையை, ஜூலை 26, 2021 (இந்திய நேரம் காலை 9:00 மணி) முதல் ஜூலை 31, 2021 வரை (இந்திய நேரம் மாலை 5:00 மணி) வரை company.secretary@intellectdesign.com அல்லது naresh.vv@intellectdesign.comக்கு அனுப்பி தங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம். ஒரு பேச்சாளராக தங்களை முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே AGMன் போது தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த / கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்படுவார்கள். AGMக்கான நேரம் கிடைப்பதைப் பொறுத்து பேச்சாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் உரிமை நிறுவனத்திற்கு உள்ளது.

இயக்குநர் குழுவின் ஆணைப்படி
**இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்**
கையொப்பம்
**V.V. நரேஷ்**
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : ஜூலை 20, 2021



# மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

**பதிவு அலுவலகம்: மஹிந்தரா டவர்ஸ், P K குர்னி சவ்க், வெர்லி, மும்பை-400 018, மஹாராஷ்ட்ரா, இந்தியா.**
Tel:+91 22 66523500, Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com
**பிராந்திய அலுவலகம்:** எண்.621, 2-வது தளம், SIRE மேன்ஷன், அண்ணா சாலை, சென்னை **- 600 006**
**கிளை அலுவலகம்: திருவள்ளூர்,** எண்.20A,முதல் தளம், ஜட்ஜஸ் காலனி, 2-வது தெரு, J.N.ரோடு, பெரியகுப்பம், மாருட் ஐ ஸ்கேன் பின் பக்கம், திருவள்ளூர்-602001

**அசையா சொத்துக்களின் சுவாதீன அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 8 & 9ன் படி **கீழ்குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள் / ஜாமீன்தாரர்ளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன் பெற்றவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால். குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 19.07.2021 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட், திருவள்ளூர் கிளைக்கு வந்து சேர வேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**வ.எண்.1: கடன்தாரர்: Mr.C.ஆறுமுகம் B, சக-கடன்தாரர்கள்: Mrs.A.செந்தாமரை, Mr.A.நேருஜி, Mr.N.ராஜாமணி, ஜாமீன்தாரர்: Mr.M.செல்வமணி;** (கடன் கணக்கு எண்.**XRESTVR00022526**); கோரிக்கை அறிவிப்பு தேதி: **23.05.2018; கடன் நிலுவைத்தொகை: ரூ.2,13,302/-** மற்றும் வட்டி.

**சொத்து விவரம்:** திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, புதிய S.F. எண்.159/22, பழைய S.F.எண்.159/3A, நெய்வேலி கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 73 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: ரோடு, மேற்கு: சேகர் மனை, வடக்கு: செங்கன் மனை, தெற்கு: ரோடு.

**வ.எண்.2: கடன்தாரர்: Mr.Y.எமரோஸ், சக-கடன்தாரர்கள்: Mrs.E.மல்லிகா, Mr.E.வேலன், Mrs.V.கலைவாணி, ஜாமீன்தாரர்: Mr.I.பாரதி;** (கடன் கணக்கு எண்.**XRESTVR00028148**); கோரிக்கை அறிவிப்பு தேதி: **20.11.2019; கடன் நிலுவைத்தொகை: ரூ.3,38,761.31** மற்றும் வட்டி.

**சொத்து விவரம்:** திருவள்ளூர் பதிவு மாவட்டம், ஆரணி சார்பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, புதிய S.F எண்.183/54, பழைய S.F.எண்.183, பட்டா எண்.7439, திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 0028 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: ரோடு, மேற்கு: பொந்து காலி மனை, வடக்கு: ராதாகிருஷ்ணண் வீடு, தெற்கு: மோகன் வீடு.

**வ.எண்.3: கடன்தாரர்: Mrs.B.குமாரி, சக-கடன்தாரர்: Mr.பாலசந்தர், ஜாமீன்தாரர்: Mr.K.வடிவேலு;** (கடன் கணக்கு எண்.**XRESTVR00037713**); கோரிக்கை அறிவிப்பு தேதி: **23.05.2018; கடன் நிலுவைத்தொகை: ரூ.2,97,149/-** மற்றும் வட்டி.

**சொத்து விவரம்:** காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, புதிய S.F எண்.309/5, பழைய S.F.எண்.21/2, 3-பகுதி, பெரட்டூர் கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 969 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: காத்தம்மாள் வீடு, S.F.எண்.309/4, மேற்கு: ரோடு, வடக்கு: ரோடு, தெற்கு: ஜெகநாதன் வீடு.

**வ.எண்.4: கடன்தாரர்: Mr.D.மதியழகன், சக-கடன்தாரர்: Mrs.M.ரேணுகா, ஜாமீன்தாரர்: Mr.N.சந்திரசேகர்;** (கடன் கணக்கு எண்.**XRESTVR00020722**); கோரிக்கை அறிவிப்பு தேதி: **23.05.2018; கடன் நிலுவைத்தொகை: ரூ.2,48,965/-** மற்றும் வட்டி.

**சொத்து விவரம்:** திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, புதிய S.F.எண்.59/2B, மூவூர் கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 118 சதுர மீட்டர் (3சென்ட்) நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.22, மேற்கு: ரோடு, வடக்கு: மனை எண்.20, தெற்கு: ரோடு.

**இடம்: திருவள்ளூர்**
**தேதி : 19.07.2021**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்**


**எமது பதிப்புகள்:** சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
புதன், ஜூலை 21, 2021

# பள்ளிப் பாடநூல்கள் அரசியல் கட்சிகளின் பிரச்சார அறிக்கைகள் அல்ல

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமிக்கப்பட்டபோது தொடங்கிய விவாதங்களும் சர்ச்சைகளும், அவர் பொறுப்பேற்ற பிறகு வேறு திசையில் இன்னும் தீவிரம்பெற்றிருக்கின்றன. தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பெண்களைக் கண்ணியக் குறைவான முறையில் பேசியதாக லியோனி மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள், அவர் அப்பொறுப்பில் நியமிக்கப்பட்டபோது மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தப்பட்டிருக்கின்றன. 33 ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த லியோனி, அறிவொளி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டவர். அவரைப் பாடநூல் கழகத்தின் தலைவராக நியமித்தது சரியானதுதான் என்று திமுகவுக்கு வெளியிலிருந்தும் ஆதரவுக் குரல்கள் எழுந்தன. தவிர்த்திருக்கப்பட வேண்டியவை என்று அவரது மேடைப் பேச்சுகளைக் கடந்துசென்றாலும், பாடநூல் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பிறகு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், அவர் அளித்த பதில்கள் விவாதத்துக்குரியதாகவே அமைந்துள்ளன.

ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் இலக்கியப் பணிகள், கல்விப் பணிகள், பொதுமக்களுக்கு ஆற்றிய பணிகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதற்காக ஆற்றிய பணிகள் குறித்துப் பாடங்கள் இடம்பெறும் என்று லியோனி தெரிவித்துள்ளார். நடப்புக் கல்வியாண்டில் புத்தகங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுவிட்டதால், அடுத்த ஆண்டு இத்திருத்தங்களைச் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். திமுகவின் தேர்தல் பிரச்சாரங்களில் கலந்துகொண்டதற்கான பரிசாகத் தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை அவர் கருதியிருக்கலாம். அதற்கான நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையிலேயே அவரது பேச்சு அமைந்துள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் சமச்சீர் பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஏறக்குறைய அனைத்து வகுப்புப் பாடங்களிலுமே திமுக குறித்தும் மு.கருணாநிதி குறித்தும் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன. அதிமுக ஆட்சிக்கு வந்ததும் அந்தக் குறிப்புகள் நீக்கப்பட்டன. அதுபோலத் தலைவர்களின் பங்களிப்புகளை மாணவர்களுக்குப் பாடமாக வைப்பதை அரசியலாகப் பார்க்கக் கூடாது என்று ஒரு கேள்விக்குப் பதிலளித்திருக்கிறார் லியோனி. ஒன்றிய அரசோ, மாநில அரசோ எந்தவொரு ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும் அதன் கருத்தியல்ரீதியிலான சார்புநிலைகள் பாடநூல்களிலும் எதிரொலிக்கவே செய்கின்றன. தமிழ்நாடும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், ஒரே கருத்தியலில் இயங்கும் இரண்டு கட்சிகள் மாறி மாறி ஆளும் மாநிலத்தில், குறிப்பிட்ட ஒரு கட்சியின் தலைவரைப் பற்றி மட்டுமே பாடங்கள் இடம்பெறும்போதுதான், ஆட்சி மாற்றங்களின்போது பாடநூல் வரிகள் கருப்பு மை கொண்டு அழிக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. மு.கருணாநிதியின் இலக்கியப் பணிகள் பாடமாக்கப்படும்போது, அவரது சமகாலத்து திராவிட இயக்க எழுத்தாளர்களைப் பற்றி பாடங்கள் இடம்பெறுவதில்லை. முன்னாள் முதல்வர் என்ற முறையில் அவரது சமூகப் பணிகள் பாடமாக்கப்படும்போது, அவருக்கு முன்பும் பின்பும் ஆட்சிசெய்த மற்ற முதல்வர்களைப் பற்றிய பாடங்களும் இடம்பெறுவதுதானே முறை? அதற்கு வாய்ப்பில்லாதபட்சத்தில்தான் கட்சி அரசியல் தலைதூக்குகிறது. கடந்த காலத் தவறுகள் மீண்டும் நிகழாதிருக்கட்டும்.

# சின்னச் சின்ன பெரிய விஷயங்கள்



பன்னெடுங்காலமாகப் பலரும் சொல்லிவந்ததுதான்... தினையளவு செய்யப்படும் உதவி பனையளவாகக் கருதப்படும். கூடுதலாக ஏற்றப்பட்டால் சிறிய மயிலிறகுகூடப் பெரிய வண்டியின் அச்சை முறித்துவிடும்!

**மு.இராமனாதன்**

சமீபத்தில் அந்தக் காணொளி வைரலானது. தெலங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ், அரசு கட்டிய சில தொகுப்பு வீடுகளைத் திறந்துவைத்தார். ஒரு வீட்டின் நிலை வாசலின் நடுவே ரிப்பன் கட்டப்பட்டிருந்தது. இப்போது முதல்வர் ரிப்பனைக் கத்தரிக்க வேண்டும். அதற்குக் கத்தரிக்கோல் வேண்டும். முதல்வரின் அருகில் நிற்கும் ஓர் அமைச்சர் 'கத்தரிக்கோலைக் கொண்டுவாருங்கள்' என்கிறார். அந்த வேண்டுகோள், அடுத்த வரிசை உயர் அதிகாரிகளுக்கும், அவர்கள் வழியாக, பின்னால் நிற்கும் இளம் அதிகாரிகளுக்கும், உடன் ஊழியர்களுக்கும் போகிறது. ஆனால், கத்தரிக்கோல் வரவில்லை. பொறுமை இழந்த முதல்வர், விரல்களாலேயே ரிப்பனை முறித்துப் புதிய வீட்டுக்குள் பிரவேசிக்கிறார். அரசின் நலத்திட்டத்துக்குக் கிடைக்க வேண்டிய கவனம், காட்சிக்குள் வராத ஒரு கத்தரிக்கோலுக்குக் கிடைத்துவிடுகிறது. கத்தரிக்கோல் சின்ன விஷயம்தான். ஆனால், அமைப்பாளர்கள் கருத்தில் கொள்ளாத இந்தச் சின்ன விஷயம்தான் நிகழ்ச்சியில் பெரிய விஷயமாகிவிட்டது.

**தினைத்துணை**

பன்னெடுங்காலமாகப் பலரும் சொல்லிவந்ததுதான்... தினையளவு செய்யப்படும் உதவி பனையளவாகக் கருதப்படும். கூடுதலாக ஏற்றப்பட்டால் சிறிய மயிலிறகுகூடப் பெரிய வண்டியின் அச்சை முறித்துவிடும். எல்லாம் படித்திருக்கிறோம். ஆனால், நம்மில் பலர் சிறிய விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

பல பெரிய மனிதர்கள் சிறிய விஷயங்களில் கருத்தாக இருப்பார்கள். நம்மில் ஒவ்வொருவரும் பிரமுகர்களையோ நட்சத்திரங்களையோ சந்தித்திருப்போம். அப்படியான சந்திப்பைப் பற்றி எல்லோரிடமும் ஒரு கதை இருக்கும்.

தொந்தி எனும் பெரியவரிடமும் ஒரு கதை இருந்தது. அப்படி ஒரு விநோதமான பெயரைத்தான் அவர் சூடியிருந்தார். பெரியாறு அணைக்கட்டில் லஸ்கராகப் பணியாற்றினார். லஸ்கர் என்பது பாரசீகச் சொல். பொதுப்பணித் துறையில் அணைப் பராமரிப்பு, தண்ணீர்க் கட்டுப்பாடு போன்ற சவாலான பணிகளில் ஈடுபடும் முன்களப் பணியாளர்களைக் குறிக்கும். சிவாஜி கணேசன் படப்பிடிப்புக்காகத் தேக்கடி வந்திருக்கிறார். பெரியாறு சரணாலயப் பரப்பில் படப்பிடிப்பு நடந்தது. படம் 'சுமதி என் சுந்தரி'யாக இருக்கலாம் என்பது என் ஊகம். தொந்தி படப்பிடிப்புக்கு உதவியாக இருந்தார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, சிவாஜி தனது குடும்பத்துடன் தேக்கடிக்கு வந்தார். அங்கிருந்து பெரியாறு சென்றார். அணைக்கட்டின் படகுத் துறையில் சிவாஜியையும் அவர் குடும்பத்தினரையும் வரவேற்க அதிகாரிகளும் ஊழியர்களும் நின்றுகொண்டிருந்தனர். படகில் ஒரு காலும் நிலத்தில் ஒரு காலுமாக இறங்கிக்கொண்டிருந்த சிவாஜியின் கண்களில் முதலில் பட்டவர், பின்வரிசையில் நின்றுகொண்டிருந்த தொந்தி. இரண்டாவது காலை நிலத்தில் ஊன்றுவதற்கு முன்பாகவே 'என்ன தொந்தி, எப்படி இருக்கீங்க?' என்று கேட்டாராம் சிவாஜி. தேக்கடி பொதுப்பணித் துறை வட்டாரத்தில் சில நாட்களுக்குத் தொந்தி ஒரு நட்சத்திரமாகத் திகழ்ந்தார். இதை என்னிடம் சொன்னபோது அந்தப் பெரியவரின் கண்கள் நிறைந்திருந்தன.

ஒவ்வொரு நாளும் பலரைச் சந்திக்கும் ஒரு உச்ச நட்சத்திரத்தால் பத்து ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்த ஒரு எளிய மனிதரைப் பெயர் சொல்லி அழைக்க முடிகிறது. இது நினைவாற்றல் மட்டுமல்ல. யாரையும் சிறியார் என்று கருதாத பண்பு. சின்னச் சின்ன விஷயங்களைப் பொருட்படுத்துபவர்களே பெரிய விஷயங்களைச் சாதிக்கிறார்கள். ஆனால், அந்த இடத்துக்குப் பலரது சாபங்களைக் கடந்துதான் அவர்கள் வந்து சேர்ந்திருப்பார்கள். அப்படிச் சாபமிட்டவர்களில் ஒருவன் நான். சாபமேற்றவர் பெயர் செங். இது ஹாங்காங்கில் நடந்தது.

**102 சின்னத் தவறுகள்**

செங் என்பதைச் சீன உச்சரிப்புக்கு இசைவாக Cheng, Ching, Cheung என்று ஆங்கிலத்தில் பலவாறாக எழுதுவார்கள். எனக்கு மூத்த பொறியாளராக இருந்த செங், தனது பெயரை Cheng என்று எழுதுவார். ஹாங்காங்கில் எல்லாப் பொறியியல் வரைபடங்களையும் கட்டிடத் துறைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அரசின் பதிவுபெற்ற பொறியாளர் அவற்றில் ஒப்பமிட வேண்டும். ஒரு ஒப்பந்தக்காரர் சில கட்டுமான வரைபடங்களைக் கட்டிடத் துறையின் ஒப்புதல் பெறுவதற்காக நான் வேலை பார்த்த நிறுவனத்துக்கு அனுப்பி வைத்திருந்தார். நான் படங்களைச் சரிபார்த்துவிட்டு, செங்கின் கையெழுத்துக்காக அனுப்பி வைத்தேன். செங் ஒப்பமிடவில்லை. படங்களில் பிழையில்லை. அவர் ஒப்பமிட வேண்டிய இடத்தில் அவரது பெயர் Cheung என்று இருந்தது. அது Cheng என்று இருந்திருக்க வேண்டும். 'சின்னத் தவறுதானே?' என்றேன். மொத்தம் 102 வரைபடங்கள் இருந்தன. '102 சின்னத் தவறுகள்' என்றார் செங். வரைபடங்களைத் திரும்ப அனுப்பி, திருத்தத்தைப் பெறுகிற வேலை என்னிடம் வந்தது. அது ஆயாசம் அளித்தது. ஆனால், சின்ன விஷயங்களில் சமரசம் செய்துகொள்பவர்களால் பெரிய விஷயங்களை அடைய முடியாது என்கிற பாடமும் அதில் இருந்தது.

**சமரசம் எனும் தேசிய குணம்**

நாம் நாள்தோறும் பல சின்ன விஷயங்களில் சமரசம் செய்துகொள்கிறோம். ஓர் எடுத்துக்காட்டு. சஞ்சயன், டெல்லியின் பெருமிதங்களில் ஒன்றாகிய குடியரசுத் தலைவர் மாளிகைக்குப் போகிறார். சஞ்சயன் சூழலியல் விஞ்ஞானி. எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் மகன். சஞ்சயன் அந்த மாளிகைக்குச் சென்றது ஓர் ஆவணப்பட நேர்காணலுக்காக. அப்போதைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். நேர்காணலின்போது தனது உதவியாளரை அழைக்க மேசையில் இருந்த பொத்தானை அழுத்துகிறார் கலாம். சஞ்சயன் சொல்கிறார்: 'அந்தப் பொத்தானை அவருடைய மேசையில் ஒருவித ஒளிவுமறைவுமின்றிப் பொருத்தி வைத்திருந்தார்கள். அதிலே இருந்த, தாறுமாறாகச் சென்ற வயர்கள் மேசையின் ஓரத்தில் ஸ்டேப்பிள் செய்யப்பட்டிருந்தன.' குடியரசுத் தலைவர் மாளிகையில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான அலுவலர்களில் யாருக்கும் அந்த வயர்களை மறைத்துவைக்க வேண்டும் என்று தோன்றவில்லை. அதாவது, அது அவர்கள் கண்ணை உறுத்தவில்லை. ஆனால் சஞ்சயனுக்கு அது உறுத்தியது.

தெலங்கானா அதிகாரிகளுக்குக் கத்தரிக்கோல் சின்ன விஷயம். எனக்கு செங்கின் பெயரில் இருந்த எழுத்துப் பிழை சின்ன விஷயம். ஜனாதிபதி மாளிகை அலுவலர்களுக்கு நாட்டின் தலைமைக் குடிமகனின் மேசையில் தாறுமாறாகத் தொங்கும் வயர்கள் சின்ன விஷயம். சின்னச் சின்ன விஷயங்களில் சமரசம் செய்துகொள்வது நமது தேசிய குணமோ என்று எனக்குப் பல முறை தோன்றியிருக்கிறது. சின்ன விஷயங்களில் நாம் கவனம் செலுத்துவோம். சின்னச் சின்ன விஷயங்களால்தானே பெரிய விஷயங்கள் கட்டமைக்கப்படுகின்றன.

- மு.இராமனாதன், எழுத்தாளர், பொறியாளர்.
தொடர்புக்கு: mu.ramanathan@gmail.com

# மீன்வள மசோதா: இலக்குத் தவறிய தோட்டா

**வறீதையா கான்ஸ்தந்தின்**




தற்போது நடைபெற்றுவரும் மழைக்கால நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், ஒன்றிய அரசு ஒப்புதல் பெறத் திட்டமிட்டுள்ள 23 மசோதாக்களில் ஒன்றான கடல் மீன்வள (ஒழுங்காற்று) மசோதா (2021) மீனவர்களிடையே மீண்டும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இம்மசோதா ஏற்கெனவே இருமுறை (2009, 2019) வெளியிடப்பட்டு, மீனவர்களின் பரவலான எதிர்ப்பால் கைவிடப்பட்ட ஒன்று.

புரத உணவுத் தேவையின் பொருட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒன்றிய அரசு விசைப்படகு, இழுவைமடித் தொழில்நுட்பங்களை மீனவர்களுக்குக் கொடுத்தது. இயந்திரங்களின் உதவியின்றி எளிமையான கலன்களில் சிறு தொலைவுக்குள்ளே மீன்பிடித்துத் திரும்பிய காலங்களில் பெருமுதலீடுகள் தேவைப்படவில்லை; இயக்குச் செலவுகளும் ஏற்படவில்லை.

முதலீடு/ தொழில்நுட்ப அடிப்படையில் கட்டுமர/ நாட்டுப் படகு, இயந்திர நாட்டுப் படகு/ இயந்திரப் படகு, விசைப் படகு என்னும் மூன்று பிரிவினர் கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஏறத்தாழ 90,000 விசைப் படகுகள் இந்தியக் கடல்களில் இயங்கிவருகின்றன. கரைக்கடலில் குறைவான கடற்பரப்பில், குறைந்துவரும் மீன்வளங்களை அறுவடை செய்வதில் மீனவர்களுக்கிடையில் கடும் போட்டியும் மோதல்களும் எழுகின்றன. நவீனத் தொழில்நுட்பங்களைப் பொறுத்தவரை பெருமுதலீடு, எரிபொருள், பராமரிப்பு உள்ளிட்ட அன்றாடச் செலவினங்கள் புதிய நெருக்கடிகளாகும். முதலீடுகள் அதிகரிக்க அதிகரிக்க, அதிக அறுவடையைக் குறிவைத்து உள்கடலுக்குப் போகும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தியாவின் முற்றுரிமைப் பொருளாதாரக் கடற்பரப்பு 20.2 லட்சம் ச.கி.மீ. கரைக்கடல் பகுதிகளின் மிகை முதலீடும் தொழில் நெரிசலும் ஏற்பட்டிருக்கும் அதே வேளையில், ஆழ்கடலிலுள்ள மீன்வளம் யாரால் அறுவடை செய்யப்பட்டுவருகிறது?

ஒன்றிய அரசு இந்தியக் கடல்களில் வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கை (1977), இந்தியக் கடல் மண்டலங்கள் (வெளிநாட்டுக் கப்பல் மீன்பிடி ஒழுங்காற்றுதல்) சட்டம் (1981), வரன்முறைக் கொள்கை (1986) ஆகியவற்றை வெளியிட்டது. நடைமுறையில் இவையனைத்தும் தோல்வியைத் தழுவின. தேசிய மீன்தொழிலாளர் பேரவையின் எதிர்ப்பு காரணமாக, இவ்வரன்முறைக் கொள்கை திரும்பப் பெறப்பட்டது. தொடர்ந்து, தேசிய மீன்வளக் கொள்கையின் கீழ் (1991) கூட்டு மீன்பிடித் திட்டத்தில் நரசிம்ம ராவ் அரசு, வெளிநாட்டுக் கப்பல்களுக்கு மீன்பிடி உரிமம் வழங்கியது. இதற்கு எதிராக மீனவர்கள் நாடுதழுவிய போராட்டத்தில் இறங்கினர். இந்தப் பின்னணியில் 'சுதர்சன் குழு' (1994) முக்கியமான பரிந்துரைகளை வழங்கியது; அவற்றில் சில:

1. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் கண்காணிக்கப்பட வேண்டும்.

2. (கூட்டு) மீன்பிடித் திட்டத்தின் கீழ், 100% வெளிநாட்டு முதலீடு கொண்ட இந்தியக் கப்பல் உள்ளிட்ட அனைத்துக் கப்பல்களிலும் இருப்பிடம் காட்டும் தொழில்நுட்பம் நிறுவப்பட வேண்டும்.

3. முற்றுரிமைப் பொருளாதாரக் கடற்பகுதியில் இயங்கும் மீன்பிடிக் கலன்களுக்கு அறுவடை அறிக்கை முறையைக் கட்டாயமாக்க வேண்டும்.

4. பாரம்பரிய/ சிறுதொழில் மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் பயிற்சி அளிக்க வேண்டும்; ஆழ்கடல் மீன்பிடித்தலில் இம்மீனவர்கள் இறங்கும் வண்ணம் மீனவர் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவ வேண்டும்.

'புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக இந்தியக் கடல்களில் மீன் பஞ்சம் நேர்ந்துள்ளது' என முராரி குழு, அதன் அறிக்கையில் (1996) சுட்டிக்காட்டியது. முக்கியமாக, 'ஒன்றிய அரசு பன்னாட்டுக் கப்பல்களின் மீன்பிடி உரிமங்களைத் திரும்பப் பெற வேண்டும்' எனப் பரிந்துரைத்தது. ஆனால் சுதர்சன் குழு, முராரி குழு பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தவேயில்லை.

உயர் அதிகாரக் கடல் மீன்வள நிலைக் குழு (2004) அனுமதிக் கடிதத் திட்டத்தின்படி, இரண்டு நிபந்தனைகளுடன் பன்னாட்டுக் கப்பல்கள் மீன்பிடிக்க அனுமதி வழங்கியது:

(அ) கப்பல்கள் கடல் பயண விவரங்களை இந்திய மீன்வள அளவைத் தளத்தில் (மும்பை) முன்கூட்டிச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) காலாண்டுதோறும் அறுவடையை அறிக்கையிட வேண்டும்.

ஆனால், திட்ட நிபந்தனைகளைக் கப்பல்கள் பின்பற்றவில்லை. இது தொடர்பாக நடுவண் குற்றப் புலனாய்வுக் குழு அளித்த அறிக்கையை மேற்கோள் காட்டிய நீதிமன்றம், '(இந்தியக் கடல்களில்) எத்தனை (மீன்பிடி) கப்பல்கள் இயங்கின, எந்தக் கப்பல்கள் என்னென்ன முறையில், எவ்வளவு அறுவடை செய்தன, எவ்வளவு அறுவடையை நடுக்கடலில் (தாய்க் கப்பல்களுக்கு) மடைமாற்றின என்கிற தரவுகள் இந்திய அரசிடம் இல்லை' என்று குறிப்பிட்டது. இது குறித்து 03.05.2012 நாளிட்ட 'தி இந்து' நாளிதழ் 'கடலைக் கொள்ளையிட ஓர் அனுமதித் திட்டம்' என்று தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டிருந்தது. ஐயப்பன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒன்றிய அரசு 2017–ல் அனுமதிக் கடிதத் திட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டது.

'வளரும் நாடுகள் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கிவரும் மானியங்களும் சலுகைகளும்தான் ஆழ்கடல் மீன்வளங்களை அவை கொள்ளையிட வழிவகுக்கின்றன; அம்மானியங்களை நிறுத்திவிட வேண்டும்' என்று உலக வாணிப அமைப்பு கடந்த வாரம் வலியுறுத்தியுள்ளது. சீனா, தென்கொரியா, தாய்லாந்து, இந்தோனேசிய மீன்பிடிக் கப்பல்கள் இந்தியக் கடல்களில் ஊடுருவி மீன்பிடிக்கின்றன. தொலைகடல் மீன்பிடிக்கு அனுப்பப்படும் 2,600 சீனக் கப்பல்களில் 500–க்கு மேற்பட்டவை இந்தியப் பெருங்கடலின் தென்பகுதியிலுள்ள மீன்வளங்களை அறுவடை செய்துகொண்டு போகின்றன.

1960–கள் தொடங்கி, ஒன்றிய அரசு நவீனத் தொழில்நுட்பங்களில் காட்டிவந்துள்ள தாராளவாத அணுகுமுறையும், வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களைக் கையாள்வதில் காட்டிவரும் அலட்சியமும்தான் கடல்மீன்வள வீழ்ச்சிக்கும் மீனவர் வாழ்வாதார இழப்புக்கும் முக்கியமான காரணங்கள் என்பதை இவ்விவரங்களிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். வாழ்வாதார உரிமைக்கான மீனவர்களின் நெடிய போராட்டம் வலி மிகுந்தது.

காந்தியப் பொருளாதார வல்லுநர் ஜே.சி.குமரப்பா, 'அரசின் வேளாண் உற்பத்திக் கொள்கை லாபம் சார்ந்ததாய் இருக்காமல், இயற்கையையும் அதைச் சார்ந்த மக்களையும் முன்னிறுத்த வேண்டும்' என்பார். மீன்வள மேலாண்மையில் உலக நாடுகள் பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு முன்னுரிமை தர வேண்டும் என உலக உணவு, வேளாண் அமைப்பின் ஆவணமான 'பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதிகள்' (1995) வலியுறுத்துகிறது.

மீன்வளம் மாநிலப் பட்டியலின்கீழ் அமைந்த துறை. 12 கடல்மைலுக்கு உட்பட்ட கடலில் மிகைமுதலீடு, நாசகார மீன்பிடி போன்ற சீர்கேடுகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு அந்தந்த மாநில அரசினுடையதாகும். 'மீன்வளம் தொடர்பான சட்டங்களை உருவாக்குவதில் மாநிலங்கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்' என்று கனிமொழி எம்.பி. குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. நமது சட்டங்கள், நம் கடல்களின் மீன்வளங்களை நம் நாட்டு மக்களுக்குக் கரைசேர்க்கும் வகையில் வடிவம்பெற வேண்டுமேயன்றி, சிறுதொழில் மீனவர்களைக் கடலிலிருந்து வெளியேற்றும் ஆயுதமாகிவிடக் கூடாது. அவர்களுக்கு வேறு போக்கிடம் இல்லை.

- வறீதையா கான்ஸ்தந்தின், பேராசிரியர், கடல் சூழலியல்
- வள அரசியல் ஆய்வாளர், vareeth2021@gmail.com

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in
சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா. அஞ்சல் முகவரி:
ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.

**மீட்டர் பேசுது**

| | | | | |
|---|---|---|---|---|
| 35.4°c | 34.9°c | 36.1°c | 36.8°c | 31.5°c |
| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
| 34.0°c | 34.7°c | 17.2°c | 18.1°c | |
| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் | |

தமிழ்நாடு, புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை 26 முதல் 35 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக்கூடும்.

# தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசிக்கு நடவடிக்கை

**● சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்**

■ கோவை

தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக கரோனா தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

கோவை சின்னியம்பாளையத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான கரோனா தடுப்பூசி முகாம் நேற்று நடைபெற்றது. இந்த முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பார்வையிட்டனர். அதைத் தொடர்ந்து, தமிழக - கேரள எல்லைப் பகுதியான வாளையாறு சோதனைச்சாவடியில் ஜிகா வைரஸ் மற்றும் கரோனா தொற்று தடுப்பு பணிகளை அமைச்சர்கள் ஆய்வு செய்தனர். பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரோனா உருமாறி டெல்டா, டெல்டா பிளஸ் போன்ற புதிய வகை வைரஸ்கள் பரவுகின்றன. அதேபோல, டெங்குவின் தொடர்ச்சியாக ஜிகா வைரஸ் பரவி வருகிறது. ஜிகா வைரஸ் கர்ப்பிணிகளை தொற்றினால், சிறிய அளவிலான தலையுடன் குழந்தை பிறக்கலாம். தமிழகத்தில் ஜிகா வைரஸ் இல்லை. முதல்வர் உத்தரவுப்படி, வாளையாறு அருகே பழைய தெரு, மாவுத்தம்பதி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நேரடியாக சென்று 95 வீடுகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தினேன்.

ஒரு ஊராட்சிக்கு 10 பேர் வீதம், பேரூராட்சிக்கு 20 பேர் வீதம் விழிப்புணர்வு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.



▲ கோவை வாளையாறு சோதனைச்சாவடியில் ஜிகா வைரஸ் தடுப்புப் பணிகளை பார்வையிட்ட அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அர.சக்கரபாணி. அருகில், சுகாதாரத் துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர். படம்: ஜெ.மனோகரன்

தமிழகம் முழுவதும் 21 ஆயிரம் பேர் கொசு ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜனவரியில் தொடங்கி தற்போது வரை, 2,500 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கான சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சென்னைக்கு அடுத்து கோவைக்குதான் அதிக அளவில் கரோனா தடுப்பூசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோவையில் 10 லட்சத்து 97 ஆயிரம் டோஸ் போடப்பட்டுள்ளது. இன்னமும் விரைவுபடுத்தப்பட உள்ளது.

மத்திய அரசு 75 சதவீதம் மாநில அரசுகளுக்கும், 25 சதவீதம் தனியார் மருத்துவமனைகளுக்கும் தடுப்பூசியை வழங்குகிறது. தொழில்நிறுவனங்களின் சி.எஸ்.ஆர் நிதியை பயன்படுத்தி, தனியார் மருத்துவமனையில் மக்களுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்துக்கு 1 கோடியே 86 லட்சத்து 37 ஆயிரத்து 670 தடுப்பூசிகள் பெறப்பட்டுள்ளன. இதில் 1 கோடியே 82 லட்சத்து 38 ஆயிரத்து 988 தடுப்பூசிகள் போடப்பட்டு உள்ளன. 1.90 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன.

தவிர, 5 லட்சம் தடுப்பூசிகள் தமிழகத்துக்கு வர உள்ளன. மொத்தம் 12 கோடி தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6 கோடி பேர் உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார். சுகாதாரத் துறை செயலர் ராதாகிருஷ்ணன், ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் உடனிருந்தனர்.

பட்டப்படிப்பு வரை தமிழில் படித்தோருக்கு 20% இடஒதுக்கீடு

# குரூப் 1 தேர்வுக்கு விலக்கு கோரிய அரசின் மனு தள்ளுபடி

■ மதுரை

ஒன்று முதல் பட்டப்படிப்பு வரை தமிழ் வழியில் பயின்றோருக்கு மட்டுமே 20 சதவீத இடஒதுக்கீடு சலுகை என்ற உத்தரவில் இருந்து, 2020-ம் ஆண்டு குரூப் 1 தேர்வுக்கு விலக்குக் கோரி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தேர்வாணையத்தின் சார்பில் உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2019-ல் நடத்திய குரூப் 1 தேர்வில் ஒன்று முதல் பட்டப்படிப்பு வரை தமிழ் வழிக் கல்வியில் பயின்றோருக்கு மட்டுமே அரசு வேலைவாய்ப்பில் அளிக்கப்படும் 20 சதவீத இடஒதுக்கீட்டுச் சலுகையை வழங்க வேண்டும் என கடந்த ஆண்டு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2020-ம் ஆண்டுக்கான குரூப் 1 முதல் நிலைத் தேர்வு முடிவுகள் பிப்.9-ல் வெளியானது. இதில் உயர் நீதிமன்றம் கடந்த ஆண்டு பிறப்பித்த தமிழ் வழிக் கல்வி இடஒதுக்கீட்டுச் சலுகை தொடர்பான உத்தரவைப் பின்பற்றவில்லை.

எனவே, 2020-ம் ஆண்டு குரூப் 1 தேர்வில் ஒன்று முதல் பட்டப்படிப்பு வரை தமிழ் வழியில் கல்வி பயின்றோருக்கு மட்டும் 20 சதவீத இட ஒதுக்கீட்டுச் சலுகை வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைச் செயல்படுத்துவதில் இருந்து விலக்கு அளித்து உத்தரவிட வேண்டும் இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் என்.கிருபாகரன், பி.புகழேந்தி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடும்போது, '2020-ம் ஆண்டுக்கான குரூப் 1 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. உயர் நீதிமன்ற உத்தரவின்படி குரூப் 1 தேர்வு முடிவுகளை மாற்றி அமைத்தால் அதிகாரிகள் நியமனத்தில் தாமதம் ஏற்படும்' என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், பள்ளிப்படிப்பை ஆங்கில வழியிலும், கல்லூரிப் படிப்பை தமிழிலும் படித்தோருக்கு 20 சதவீத இட ஒதுக்கீட்டுச் சலுகை வழங்கலாமா? மதுரை காமராசர் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில பல்கலைக்கழகங்களில் தமிழ் வழியில் படித்ததாக போலிச் சான்றிதழ் பெற்று அரசு வேலைக்குச் சேர்கின்றனர்.

இதுகுறித்து தமிழக அரசு விசாரிக்க வேண்டும். அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கோரிக்கையை ஏற்க முடியாது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என உத்தரவிட்டனர்.

(C) KSL Media Ltd.

அதிமுக பொதுக்குழுவுக்கு எதிரான வழக்கு

# சசிகலா தரப்பில் பதிலளிக்க அவகாசம்

■ சென்னை

அதிமுக பொதுக்குழுவுக்கு எதிராக சசிகலா தரப்பில் தொடரப்பட்ட வழக்கை நிராகரிக்கக் கோரி அதிமுக நிர்வாகிகள் தாக்கல் செய்துள்ள மனுவுக்கு சசிகலா தரப்பில் பதிலளிக்க சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

ஜெயலலிதா மறைவுக்குப்பிறகு அதிமுக பொதுச் செயலாளராக சசிகலாவும், துணை பொதுச் செயலாளராக டிடிவி தினகரனும் தேர்வு செய்யப்பட்டனர். அதன் பிறகு சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்கு நிலையில், கடந்த 2017 செப்டம்பர் 12-ல் அதிமுக பொதுக்குழு கூட்டப்பட்டு, அதிமுக ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமியும் தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும், அதிமுக நிர்வாகிகளாக சசிகலா மற்றும் தினகரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதையடுத்து 2017 அன்று நடத்தப்பட்ட அதிமுக பொதுக் குழுக் கூட்டம் செல்லாது எனவும், குறிப்பாக தங்களை பதவியில் இருந்து நீக்கியது செல்லாது எனவும் அறிவிக்கக் கோரி சசிகலா மற்றும் தினகரன் ஆகியோர் சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இடையில் டிடிவி தினகரன் அமமுக என்ற கட்சியைத் தொடங்கி நடத்தி வருவதால் அவர் இந்த வழக்கில் இருந்து விலகிக் கொள்வதாக மனுத் தாக்கல் செய்யப்பட்டது. சசிகலா தரப்பில் இந்த வழக்கு தொடர்ந்து நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி ரவி முன்பாக நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி அதிமுக நிர்வாகிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதிலளிக்க சசிகலா தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. அதையேற்ற நீதிபதி, வழக்கு விசாரணையை ஜூலை 30-க்கு தள்ளி வைத்தார்.

**தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்**
(அரசு சார்பு நிறுவனம்)
வடக்கு வட்டம்
எண்.1 & 7, ஆய்வாளர் குடியிருப்பு, பி.ஜி.ஆர். லைன், மாநகர காவல் அலுவலக பின்புறம், அன்னதானப்பட்டி, லைன்மேடு, சேலம் - 636 006.
மின்னஞ்சல் : senctnphcl@gmail.com, தொலைபேசி எண் : 0427-2903010

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 06 / 2021-2022 நாள் : 20-07-2021

| வேலையின் பெயர் | வேலையின் தோராய மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|
| 1. திருப்பூர் மாநகரம், திருப்பூரில் புதிய மாநகர காவல் அலுவலக கட்டடம் கட்டுதல் மற்றும் வளர்ச்சிப்பணிகள் அமைத்தல். (க.பொ/வவ/வபி/1231/2021) | ரூ. 996.90 + GST @ 12% |

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு www.tntenders.gov.in அணுகவும்.
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரம் : 09.08.2021 நண்பகல் 12.00 மணி முதல் 23.08.2021 மாலை 6.00 மணி வரை.
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 25.08.2021 காலை 11.15 மணிக்கு.
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை www.tnphc.com & www.tnpolice.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

செ.ம.தொ.இ./2187/ஒப்பந்தப்புள்ளி/2021
கண்காணிப்புப் பொறியாளர், வடக்கு வட்டம்

கன்னியாகுமரி, நெல்லையில்

# ஒருநாள் முன்னதாக பக்ரீத் கொண்டாட்டம்

■ நாகர்கோவில்/திருநெல்வேலி

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் சில பகுதிகளில் கேரளாவைப் பின்பற்றி ஒருநாள் முன்னதாக நேற்று பக்ரீத் பண்டிகை கொண்டாடப்பட்டது.

பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. அதே நேரம் வளைகுடா நாடுகளிலும், கேரளாவிலும் நேற்றே பக்ரீத் பண்டிகை கொண்டாட்டங்கள் நடைபெற்றன. கேரளாவின் பக்கத்து மாவட்டமான கன்னியாகுமரியில் நாகர்கோவில், தக்கலை, குளச்சல், குலசேகரம், களியக்காவிளை, மார்த்தாண்டம் உள்ளிட்ட சில பகுதிகளிலும் நேற்று பக்ரீத் கொண்டாடப்பட்டது.

நாகர்கோவில் கோட்டாறு இமாம் அல் மஸ்ஜிதுல் அஷ்ரப் பள்ளிவாசல், இளங்கடை பள்ளிவாசல் மற்றும் மார்த்தாண்டம், தக்கலை, குலசேகரம் பகுதிகளில் உள்ள பள்ளிவாசல், தர்ஹாக்களில் நேற்று காலை முஸ்லிம்கள் பக்ரீத் சிறப்பு தொழுகை நடத்தினர். பின்னர் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



▲ நாகர்கோவில் இளங்கடை பள்ளிவாசலில் பக்ரீத் சிறப்பு தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்கள்.

திருநெல்வேலி மேலப்பாளையத்தில் மஸ்ஜித் தவ்பா ஜமாத் சார்பில், அங்குள்ள பள்ளிவாசல் வளாகத்தில் பக்ரீத் சிறப்பு தொழுகை நேற்று நடைபெற்றது. பள்ளிவாசல் தலைவர் இக்பால் உசேன் தலைமை வகித்தார். மவுலானா மீரான் தொழுகையை நடத்தினார். ஏராளமானோர் பங்கேற்றனர்.

## தமிழ் இலக்கியம் பயில உதவித்தொகை

■ தஞ்சாவூர்

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் கோ.பாலசுப்பிரமணியன் கூறியதாவது:

ஒருங்கிணைந்த 5 ஆண்டு (எம்.ஏ) தமிழ் இலக்கிய பாடப்பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2 ஆயிரம் ஊக்க உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதில் சேர பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். 2 ஆண்டு முதுகலைத் தமிழ் படிப்பில் சேரும் மாணவர்களுக்கும் மாதம் ரூ.2 ஆயிரம் வழங்கப்படுகிறது. அத்துடன், முதுகலையில் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல், மொழியியல், மெய்யியல், நிகழ்த்துக் கலை மற்றும் சுற்றுச்சூழல், மூலிகை அறிவியல் ஆகிய படிப்புகளுக்கும் சேர்க்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விவரங்களுக்கு www.tamiluniversity.ac.in என்ற முகவரியை பார்க்கலாம் என்று துணைவேந்தர் கூறியுள்ளார்.

காட்பாடி அருகே நில பிரச்சினையில்

# அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட 3 பேர் மீது புகார்

**● ஆட்சியர், எஸ்பிக்கு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் நோட்டீஸ்**

■ வேலூர்

காட்பாடி அருகே நிலப் பிரச்சினையில் திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் உள்ளிட்ட 3 பேர் மீது வன்கொடுமை சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட புகாரின் மீது விளக்கம் அளிக்குமாறு வேலூர் மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளருக்கு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் சேர்க்காடு கிராமத்தைச் சேர்ந்த பி.சுப்பிரமணி என்பவர் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தில் திமுக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், அவரது உறவினர்கள் முருகன், கிருஷ்ணன் ஆகியோர் மீது வன்கொடுமை சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் அளித்துள்ளார்.

அதில், "எனது நிலத்தை பக்கத்து நிலத்தின் உரிமையாளர்களான முருகன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் அபகரிக்க முயல்கின்றனர். இவர்கள் மீது திருவலம் காவல் நிலையத்தில் கடந்த மே 28-ம் தேதி அளித்த புகாரின்பேரில் சமுதாய சேவை பதிவேடு (சிஎஸ்ஆர்) நகல் மட்டும் வழங்கப்பட்டது. 29-ம் தேதி அளித்த புகாரின்பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை.

இது தொடர்பாக கடந்த மாதம் 26-ம் தேதி முதல்வர், தலைமைச் செயலாளர், டிஜிபிக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் அளித்த புகாரை திரும்பப் பெற அழுத்தம் கொடுக்கின்றனர். அமைச்சர் துரைமுருகனின் உறவினர்கள் என்பதால் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றனர்.

எனவே, பட்டியலின வகுப்பைச் சேர்ந்த எனக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதுடன் திமுக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் முருகன், கிருஷ்ணன் ஆகியோர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சுப்பிரமணி அளித்துள்ள புகார் மனுவின் மீது வரும் ஆகஸ்ட் 6-ம் தேதி நடைபெறும் விசாரணையின்போது வேலூர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து, காவல் துறை உயர் அதிகாரிகள் தரப்பில் கூறும்போது, "சுப்பிரமணி கூறிய புகாரின்படி அமைச்சர் துரைமுருகன் மற்றும் முருகன், கிருஷ்ணன் ஆகியோர் உறவினர்கள் இல்லை. கடந்த மே மாதம் 25-ம் தேதி சுப்பிரமணி அளித்த புகார் மனுவிலும் துரைமுருகன் பெயர் இல்லை. அவர் அளித்த புகார் மனுவின் மீது சிஎஸ்ஆர் வழங்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது, அமைச்சரின் பெயரை வேண்டும் என்றே சேர்த்து புகார் அளித்துள்ளனர். இந்த வழக்கில் இதுவரை எங்கள் தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து வரும் 6-ம் தேதி விளக்கம் அளிக்கப்படும்" என தெரிவித்தனர்.

**'பஞ்ச்'சோந்தி பராக்!**

சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்ப வேண்டும்!
– கமல்ஹாசன்




– வெ.கார்த்திக், புத்தூர்.

● **செய்தி** : எந்த வகையிலாவது கச்சத்தீவை மீட்கும் நடவடிக்கைகளை முதல்வர் எடுப்பார்! – *அனிதா ராதாகிருஷ்ணன்*

**பஞ்ச்** : எந்த வகையிலாவது மேகேதாட்டு அணையைக் கட்டாமல் தடுக்கிற நடவடிக்கையையும் எடுக்கச் சொல்லுங்க!
– ஸ்ரீராமகிருஷ்ணா, கூறைநாடு.

● **செய்தி** : அதிமுக அவைத் தலைவர் மதுசூதனனை நலம் விசாரித்தார் சசிகலா!

**பஞ்ச்** : அந்தப் பெரியவரையும் கட்சியை விட்டு நீக்க வெச்சிடுவாங்க போல இருக்கே? – எ.எம்.எம்.ரிஸ்வான், சென்னை.

விமான நிலையத்தில் தங்க கடத்தலுக்கு உடந்தை

# திருச்சியில் சுங்க ஆய்வாளர் கைது

**● 7 பேரிடம் இருந்து 3.4 கிலோ தங்கம் பறிமுதல்**

■ திருச்சி

திருச்சி விமானநிலையத்தில் தங்கம் கடத்தியதாக கைது செய்யப்பட்ட 7 பேரிடம் இருந்து 3.4 கிலோ தங்க நகைகளை மத்திய வருவாய் நுண்ணறிவுப் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். தங்கம் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த சுங்க ஆய்வாளரும் கைது செய்யப்பட்டார்.

சார்ஜாவில் இருந்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் கடந்த 18-ம் தேதி இரவு திருச்சிக்கு வந்தது. அதில் தங்கம் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில் மத்திய வருவாய் நுண்ணறிவு பிரிவு தூத்துக்குடி துணை இயக்குநர் பாலாஜி தலைமையில் 12 பேரைக் கொண்ட குழுவினர் திருச்சி விமான நிலையத்துக்கு வந்து, சார்ஜா விமானத்தில் பயணம் செய்தவர்களிடம் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது விஜய், மணிகண்டன், செல்வக்குமார், கோபி ஆகிய 4 பயணிகளிடமிருந்து ரூ.1.60 கோடி மதிப்பிலான 3.4 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இது தவிர டெர்மினலுக்கு வெளியே, கடத்தல் தங்கத்தை பயணிகளிடமிருந்து வாங்கிச் செல்வதற்காக காத்திருந்த புகாரி, ரிஸ்வான், அப்துல்பயாஸ் ஆகியோரும் பிடிபட்டனர். இந்த 7 பேரையும் கைது செய்து நடத்தப்பட்ட விசாரணையின்போது, திருச்சி விமானநிலையத்தில் பணிபுரியும் சுங்க ஆய்வாளர் தர்மேந்திரா என்பவர் கடத்தல் தங்கத்தை வெளியில் கொண்டுவர உதவி செய்து வந்ததாக தெரியவந்தது. அதைத் தொடர்ந்து அவரையும் கைது செய்தனர்.



# போராட்டமா? வெற்றியா?

■ ஸ்நேகா ■

**உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் விளையாட்டுப் போட்டிகள் என்றால் ஒலிம்பிக்தான். கரோனா பெருந்தொற்றின் காரணமாகக் கடந்த ஆண்டு நடைபெற வேண்டிய ஒலிம்பிக் போட்டி, நாளை மறுதினம் (ஜூலை 23) டோக்கியோவில் ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் 205 நாடுகளைச் சேர்ந்த சுமார் 11 ஆயிரம் வீரர்கள் கலந்துகொள்கிறார்கள். 33 விளையாட்டுகளுக்கு 339 பதக்கங்கள் வழங்கப்பட இருக்கின்றன.**


## ஒலிம்பிக் வரலாறு



இன்று மிகப் பிரம்மாண்டமாகவும் அதிக நாடுகள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டியாகவும் இருக்கும் ஒலிம்பிக் போட்டியின் வயது சுமார் 2,800 ஆண்டுகள்!

பழங்கால கிரேக்கத்தில் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் ஆரம்பித்த ஒலிம்பிக் போட்டி, கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை விளையாடப்பட்டு வந்தது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பியா என்கிற இடத்தில் ஜீயஸ் கடவுளுக்கு மரியாதை செய்யும் விதத்தில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன. இசை, சொற்பொழிவு, நாடகம் போன்றவற்றிலும் போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் மட்டுமே போட்டிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒலிம்பிக் போட்டிகளில் போர்க்குணமிக்க வீரர்கள் பங்கேற்க ஆரம்பித்த பிறகு, விளையாட்டுகளில் சுவாரசியம் கூடியது. 18ஆம் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தம், ஓட்டம், ஈட்டி எறிதல், குதித்தல் போன்ற விளையாட்டுகள் சேர்க்கப்பட்டன. 20ஆம் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை சேர்க்கப்பட்டது. காலம் செல்லச் செல்ல விளையாட்டுப் போட்டிகளின் எண்ணிக்கையும் விரிவடைந்துகொண்டே இருந்தன. 37ஆம் ஒலிம்பிக் போட்டி ஐந்து நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இப்படித் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்கத்தை ரோமானியர்கள் கைப்பற்றிய பிறகு, வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.



### நவீன ஒலிம்பிக்



பியர் டி கூபெர்டின்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கல்வியாளரும் வரலாற்றாளருமான பியர் டி கூபெர்டின், உடற்கல்வியை மேம்படுத்தும் முயற்சியில் இறங்கினார். அப்போதுதான் ஒலிம்பிக் போட்டிகளை மீண்டும் நடத்தும் எண்ணம் உருவானது. 'போட்டியில் வெற்றி பெறுவது முக்கியமல்ல; எப்படிப் போராடுகிறோம் என்பதே முக்கியம்' என்கிற நோக்கத்தை முன்வைத்து, கூபெர்டின் முயற்சியில் 1896ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் போட்டி, கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் ஆரம்பமானது. 13 நாடுகளைச் சேர்ந்த 280 போட்டியாளர்கள் இதில் கலந்துகொண்டனர். 60 ஆயிரம் பேர் பார்த்தனர்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வந்த ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டியிலும் புதிய விளையாட்டுகள் சேர்க்கப்பட்டன. பங்கேற்பாளர்களும் பார்வையாளர்களும் அதிகமானார்கள். நாடுகளிடையே பதக்கம் பெறுவதில் போட்டிகளும் அதிகரித்தன.

1900ஆம் ஆண்டு பாரீஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பெண்களும் அனுமதிக்கப்பட்டனர். 997 விளையாட்டு வீரர்களில் 22 பேர் பெண்கள். அதாவது 2.2 சதவீதத்தினர் பெண்கள். 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் 51 சதவீதம் ஆண்களும் 49 சதவீதம் பெண்களும் பங்கேற்கிறார்கள் என்பது ஆரோக்கியமான விஷயம்.

1924ஆம் ஆண்டு முதல் பனிப்பகுதியில் விளையாடக்கூடிய விளையாட்டுகளுக்காக 'குளிர்கால ஒலிம்பிக்' போட்டிகள் நடத்தப்படுகின்றன. கோடைகால ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்படுகிறது.

### ஒலிம்பிக்கில் அரசியல்



லஸ் லாங் - ஜெஸி ஓவன்ஸ்

1936ஆம் ஆண்டு ஜெர்மனியின் பெர்லின் நகரில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அப்போது ஹிட்லர் ஆட்சியில் இருந்தார். ஆரிய இனமே உயர்வானது என்கிற நாஸிகளின் கொள்கையை உயர்த்திப் பிடிக்கும் நோக்கில், நாஸிகள் அதிக பதக்கங்களைப் பெற வேண்டும் என்று நினைத்தார். விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலும் பாரபட்சம் காட்டினார்.


ஆப்பிரிக்க அமெரிக்கரான ஜெஸி ஓவன்ஸ், ஹிட்லரின் இனவாதக் கொள்கையை மாற்ற வேண்டும் என்பதற்காகக் கடினமாகப் பயிற்சிகளை மேற்கொண்டார். நீளம் தாண்டுதல் தகுதிச் சுற்றில் ஜெர்மனியின் லஸ் லாங் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று, போட்டிக்குத் தகுதி பெற்றுவிட்டார். பதற்றத்தில் இருந்த ஜெஸி ஓவன்ஸ் இரண்டு முறை தோல்வியடைந்தார். அப்போது லஸ் லாங், ஜெஸி ஓவன்ஸிடம் வந்து பதற்றப்படாமல் விளையாடினால் வெற்றி பெற முடியும் என்றார். நம்பிக்கை பெற்ற ஜெஸி ஓவன்ஸும் தகுதிச் சுற்றில் வென்று, போட்டிக்குள் நுழைந்தார். இறுதிப் போட்டியில் ஜெஸி ஓவன்ஸ் தங்கம் வென்றார். வெள்ளி வென்ற லஸ் லாங், ஹிட்லரின் எதிரிலேயே ஜெஸி ஓவன்ஸைக் கட்டிப்பிடித்துப் பாராட்டினார். இந்த ஒலிம்பிக் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று, ஹிட்லரின் இனவாத எண்ணத்தைத் தவிடுபொடியாக்கினார் ஜெஸி ஓவன்ஸ்.

1968ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த டோம்மி ஸ்மித் தங்கமும் ஜான் கேர்லோஸ் வெண்கலமும் வென்றனர். பதக்கம் பெறும்போது தங்கள் தலையைத் தாழ்த்தி, கையை உயர்த்தி, அமெரிக்காவில் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் நடத்தப்படும் விதத்துக்கு எதிர்ப்பு காட்டினார்கள்.












டோம்மி ஸ்மித்



ஜான் கேர்லோஸ்

1980ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் மாஸ்கோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை அமெரிக்கா தலைமையில் 65 நாடுகள் புறக்கணித்தன. 1979ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தான் மீது எடுத்த படையெடுப்புக்காக இந்தப் புறக்கணிப்பு. 1984ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை சோவியத் தலைமையில் கம்யூனிச நாடுகள் புறக்கணித்தன.

### வியாபார ஒலிம்பிக்

ஒலிம்பிக்கில் பதக்கம் பெறும் வீரர்களின் புகழை வணிக நிறுவனங்கள் பயன்படுத்த ஆரம்பித்தன. வெற்றி பெறும் வீரர்களுக்கு இதன்மூலம் அதிக வருமானமும் புகழும் கிடைக்கின்றன. வணிகமயமான ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுவதற்காகச் சில வீரர்கள் ஊக்க மருந்துகளைப் பயன்படுத்தி, அது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு பதக்கங்களை இழந்த சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

நாடுகள், வீரர்களின் ஒற்றுமைக்காகவும் திறமைகளைப் பறைசாற்றுவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டி, 125 ஆண்டுகளில் தன் நோக்கத்தை விட்டு விலகிச் சென்றுவிட்டது. இருந்தாலும் உலக அளவில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டி ஒலிம்பிக் என்பதால், அதன் முக்கியத்துவம் இன்னும் குறையவில்லை.

# 10 வயது ஒலிம்பிக் வீரர்!

■ மிது கார்த்தி ■

## ஒலிம்பிக் – உலகம்




- ஒலிம்பிக்கில் பயன்படுத்தப்படும் ஐந்து வளையங்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா, ஓசியானியா ஆகிய ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன.



- தொடக்கக் காலத்தில் ஒலிம்பிக்கில் வெற்றி பெறுவோருக்குப் பதக்கங்கள் வழங்கப்படவில்லை. ஆலிவ் இலைகளால் ஆன கிரீடமே வழங்கப்பட்டது.

- ஆப்பிரிக்கக் கண்டத்தில் இதுவரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றதில்லை.



- ஒலிம்பிக்கில் மிகக் குறைந்த வயதில் பங்கேற்றவர் கிரேக்கத்தைத் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீரர் டிமிட்ரியோஸ் லோண்ட்ரஸ் (dimitrios loundras). 1896 ஒலிம்பிக்கில் பங்கேற்கும் போது இவருக்குப் பத்து வயதுதான்.


- முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.




- மூன்று முறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய ஒரே நகரம் லண்டன். 1908, 1948, 2012 ஆகிய ஆண்டுகளில் இங்கே ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன.



- உலகிலேயே அதிக ஒலிம்பிக் பதக்கங்களைப் பெற்ற நாடு அமெரிக்கா. 1,127 தங்கம், 907 வெள்ளி, 794 வெண்கலம் என இதுவரை 2,828 பதக்கங்களை வென்றுள்ளது.



- ஒலிம்பிக்கில் அதிக பதக்கங்களைப் வென்றவர் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ். இதுவரை 23 தங்கம், மூன்று வெள்ளி, இரண்டு வெண்கலம் என 28 பதக்கங்களை வென்றுள்ளார்.



- பாராலிம்பிக் என்பது மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்படும் ஒலிம்பிக். போரால் உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்காக முதன் முதலில் 1948ஆம் ஆண்டில் இது நடத்தப்பட்டது. ஒலிம்பிக் போட்டி தொடங்கும் அதே நகரில் பாராலிம்பிக் போட்டியும் தொடங்கும்.

# பதக்கம் வென்ற தந்தையும் மகனும்

## ஒலிம்பிக் – இந்தியா

- சுதந்திரத்துக்கு முன்பே இந்தியா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றிருந்தாலும், 1948 லண்டன் ஒலிம்பிக் போட்டியில்தான் முதன் முதலில் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது.



- ஒலிம்பிக்கில் பங்கேற்ற முதல் துப்பாக்கிச் சுடும் இந்திய வீரர் ராஜஸ்தானைச் சேர்ந்த மகாராஜா கர்னி சிங். 1960 முதல் 1980 வரை ஐந்து ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றார்.




- 1936ஆம் ஆண்டில் பெர்லினில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் மிகச் சிறந்த ஹாக்கி வீரர் த்யான் சந்தின் ஆட்டத்தில் பிரமித்துப்போன சர்வாதிகாரி ஹிட்லர், த்யான் சந்துக்கு ஜெர்மனி குடியுரிமை தர முன்வந்தார். அதை த்யான் சந்த் மறுத்துவிட்டார்.



- ஒலிம்பிக்கில் இந்தியாவின் முதல் தனிநபர் பதக்கத்தைப் பெற்றவர் கே.டி. ஜாதவ். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த இவர், 1952 ஹெல்சின்கி ஒலிம்பிக்கில் மல்யுத்தப் போட்டியில் வெண்கலம் வென்றார்.




- ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் கர்ணம் மல்லேஸ்வரி. 2000 சிட்னி ஒலிம்பிக்கில் பளு தூக்கும் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.




- இந்தியா சார்பில் அதிக முறை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றவர் டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ். 1992 முதல் 2016 வரை ஏழு முறை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றார்.




- 1996 அட்லாண்டா ஒலிம்பிக்கில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் டென்னிஸில் வெண்கலப் பதக்கம் வென்றார். இவரின் தந்தை வெஸ் பயஸ் 1972 மியூனிக் ஒலிம்பிக்கில் ஹாக்கி அணியில் விளையாடி வெண்கலப் பதக்கம் வென்றார்.



- இந்தியாவில் மிகக் குறைந்த வயதில் ஒலிம்பிக் பதக்கம் வென்றவர் பி.வி.சிந்து. 2016 ரியோ ஒலிம்பிக்கில் 21 வயதில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.



- ஒலிம்பிக்கில் வெற்றிகரமான ஹாக்கி அணி என்றால், அது இந்திய அணிதான். 1928, 1932, 1936, 1948, 1952, 1956, 1964, 1980-ஆம் ஆண்டுகளில் நடந்த ஒலிம்பிக்கில் 8 முறை தங்கம் வென்று சாதித்திருக்கிறது நம் ஹாக்கி அணி.



- தனி நபர் பிரிவில் தங்கம் வென்ற ஒரே நபர் அபினவ் பிந்த்ரா. 2008 பெய்ஜிங் ஒலிம்பிக்கில் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் தங்கம் வென்றார்.

- இந்தியா அதிகப் பதக்கங்களை வென்றது 2012 லண்டன் ஒலிம்பிக்கில்தான். சுஷில்குமார் (மல்யுத்தம்), விஜயகுமார் (துப்பாக்கிச் சுடுதல்) வெள்ளிப் பதக்கங்களையும், சாய்னா நேவால் (பாட்மிண்டன்), மேரிகோம் (குத்துச்சண்டை), யோகஸ்வர் தத் (மல்யுத்தம்), ககன் நாரங் (துப்பாக்கிச் சுடுதல்) ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் வென்றனர்.




- 2000 சிட்னி ஒலிம்பிக் (கர்ணம் மல்லேஸ்வரி), 2016 ரியோ ஒலிம்பிக்கில் (பி.வி. சிந்து, சாக்‌ஷி மாலிக்) பெண்களால் இந்தியா பதக்கப் பட்டியலில் இடம்பிடித்தது.



சர்வதேச அரங்கில் இந்தியாவின் நற்பெயரை கெடுக்கும் குறிக்கோளுடன் காங்கிரஸ் செயல்பட்டு வருகிறது. கரோனா முதல் பெகாசஸ் விவகாரம் வரை அந்த கட்சி மத்திய அரசு மீது அபாண்டமாக குற்றம் சாட்டி வருகிறது.

● **யோகி ஆதித்யநாத்,** உத்தர பிரதேச முதல்வர் ●





மத்திய பாஜக அரசு ஹிட்லர் போல செயல்படுகிறது. நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. இதைப் பற்றி கவலைப்படாமல் மக்களை வேவு பார்க்கிறது.

● **பாரத்சிங் சோலங்கி,** காங்கிரஸ் மூத்த தலைவர் ●



| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| **45** ஆயிரம் பேர் குணமடைந்தனர் | **3.03** கோடி பேர் குணமடைந்தனர் |
| **52.67** லட்சம் பேருக்கு தடுப்பூசி | **41.18** கோடி பேருக்கு தடுப்பூசி |
| **17.92** லட்சம் பரிசோதனை | **44.73** கோடி பரிசோதனை |

## சின்னச் சின்னதாய்...



▲ பஞ்சாப் மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக நவ்ஜோத் சிங் சித்து அண்மையில் நியமிக்கப்பட்டார். இந்நிலையில் நேற்று அமிர்தசரஸ் நகருக்கு வருகை தந்த சித்துவை மலர்தூவி வரவேற்கும் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள். படம்: பிடிஐ

### நாடு முழுவதும் 24 மணி நேரத்தில் 30,093 பேருக்கு கரோனா தொற்று உறுதி

**புதுடெல்லி:** மத்திய சுகாதார அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் கூறியிருப்பதாவது:

ஜூலை 20-ம் தேதி காலை 8 மணி நிலவரப்படி 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 30,093 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த 4 மாதங்களில் பதிவான மிகக் குறைவான அளவு ஆகும். இதன்மூலம் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3,11,74,322 ஆக அதிகரித்துள்ளது. இதுபோல நேற்று ஒரே நாளில் 45,254 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். ஒட்டுமொத்தமாக 3,03,53,710 பேர் குணமடைந்துள்ளனர். 24 மணி நேரத்தில் 374 பேர் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்பு 4,14,482 ஆக அதிகரித்துள்ளது. குணமடைந்தோர் விகிதம் 97.37 சதவீதமாக உள்ளது. 1.30 சதவீதம் பேர் (4,06,130) சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதும் 24 மணி நேரத்தில் 17,92,336 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ளது. இதுவரை 44,73,41,133 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இதுவரை 41,18,46,401 டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### மத அமைப்புகளின் அழுத்தத்துக்கு அடிபணிய கூடாது: கேரள அரசுக்கு நீதிமன்றம் கண்டிப்பு

**புதுடெல்லி:** மத அமைப்புகளின் அழுத்தத்துக்கு அடிபணியக்கூடாது என்று கேரள அரசை உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது.

கேரளாவில் கரோனா வைரஸ் பரவல் ஏறுமுகமாக உள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அந்த மாநிலத்தில் வார நாட்களில் தளர்வுகளுடன்கூடிய ஊரடங்கும், வார விடுமுறை நாட்களில் முழுஊரடங்கும் அமல் செய்யப்படுகிறது. இந்த சூழலில் பக்ரீத்தை முன்னிட்டு கடந்த 18, 19, 20 ஆகிய நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை அனைத்து கடைகளையும் திறக்க கேரள அரசு அனுமதி வழங்கியது.

இந்த விவகாரம் தொடர்பாக டெல்லியை சேர்ந்த பி.கே.டி. நம்பியார் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இவ் வழக்கை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதிகள் ஆர்.எப்.நாரிமன், பி.ஆர். கவாய் ஆகியோர் கொண்ட அமர்வு, பதில் மனு தாக்கல் செய்ய கேரள அரசுக்கு உத்தரவிட்டது.

இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

கேரள அரசின் விளக்கம் ஏற்றுக் கொள்ள கூடியதாக இல்லை. கரோனா பரவல் அதிகம் உள்ள டி பிரிவு பகுதிகளிலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டது மிகவும் தவறான முடிவாகும். மக்களின் அடிப்படை உரிமைகளில் வாழ்வுரிமை பிரதானமானது. மக்களின்வாழ்வுரிமைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படக்கூடாது. வாழ்வுரிமை விவகாரத்தில் மத அமைப்புகள், வணிக அமைப்புகள் உட்பட எந்த அமைப்புகளின் அழுத்தத்துக்கும் அரசு அடிபணியக் கூடாது.

அரசின் தவறான நடவடிக்கைகளால் கரோனா வைரஸ் பரவல் அதிகரித்தால், பொதுமக்களில் யார் வேண்டுமானாலும் உச்ச நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரலாம். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# எஸ்சி, எஸ்டி பிரிவு தவிர சாதிவாரி கணக்கெடுப்பு இல்லை

● மக்களவையில் மத்திய அமைச்சர் தகவல்

**புதுடெல்லி**

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த கேள்வி ஒன்றுக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியதாவது:

நாடு முழுவதும் விரைவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்க உள்ளது. மகாராஷ்டிரா, ஒடிசா மாநில அரசுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதி வாரியான விவரங்களை சேகரிக்குமாறு கோரியுள்ளன. தாழ்த்தப்பட்டோர் (எஸ்சி) மற்றும் பழங்குடியினருக்கு (எஸ்டி) அவர்களின் மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் மக்களவையிலும் மாநில சட்டப்பேரவைகளிலும் இடம் ஒதுக்க வேண்டும் என்று 1950-ம் ஆண்டு இந்திய அரசியல் சாசனப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்சி, எஸ்டி என்ற பிரிவுகள் அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மட்டுமே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். எஸ்சி, எஸ்டி பிரிவு மக்களைத் தவிர வேறு எந்த பிரிவினரையும் சாதிவாரியாக கணக்கெடுக்கப்போவதில்லை என மத்திய அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து 2019-ம் ஆண்டு மார்ச் 28-ம் தேதியே மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனால், கரோனா காரணமாக அந்த நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கருத்துச் சித்திரம்** கருத்து: **அரங்க சேகர்,** சென்னை.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

# ‘கரோனா’ அரசியல் அல்ல; மனிதநேயம் தொடர்பான பிரச்சினை

● பாஜக எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

**புதுடெல்லி**

கரோனா பெருந்தொற்று அரசியல் பிரச்சினை அல்ல, மனிதநேயம் தொடர்பான பிரச்சினை என்று பாஜக எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

பாஜக எம்.பி.க்கள் கூட்டம் நேற்று காலை டெல்லியில் நடந்தது. இந்தக்கூட்டத்தில் , பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பங்கேற்றனர். அப்போது எம்.பி.க்களிடம் பிரதமர் மோடி பேசினார். அவரது பேச்சு விவரங்களை கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

கரோனா பெருந்தொற்று பிரச்சினை என்பது அரசியல் பிரச்சினை அல்ல. ஆனால், நமக்கும் இந்த அரசுக்கும் மனிதநேயம் தொடர்பான பிரச்சினை. 100 ஆண்டுகளுக்குப்பின் இந்த பூமியில் இதுபோன்ற பெருந்தொற்று உருவாகியுள்ளது. 100 ஆண்டுகளுக்கு முன் மக்கள் பட்டினியால் உயிரிழந்தனர். ஆனால், முதல்முறையாக, மிகப்பெரிய அளவிலான மக்கள் ரேஷன் பொருட்களைப் பெருந்தொற்று காலத்தில் பெற்றார்கள், ஒருவர் கூட பட்டினியுடன் தூங்கவில்லை. நமது கடமையை பொறுப்புடன் செய்துள்ளோம். தடுப்பூசியாக இருந்தாலும் சரி, ஏழைகளுக்கான நலத்திட்டங்களாக இருந்தாலும் சரி, அவை மக்களுக்கு கிடைப்பதை எம்.பி.க்கள் உறுதி செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள், குறிப்பாக 2 அல்லது 3 மாநிலங்களில் சுருங்கிவிட்ட கட்சி (காங்கிரஸ்) நடந்து கொள்ளும் முறை வேதனையளிக்கிறது. அதிகாரம் தங்களின் உரிமை, என நினைத்து காங்கிரஸ் கட்சி தனது விருப்பம்போல் செயல்படுகிறது. நாடாளுமன்றத்தில் விவாதங்கள் சுமூகமாக நடக்க விரும்புகிறோம். ஆனால் அவையை நடத்தவிடாமல் அமளி செய்து, காங்கிரஸ் கட்சி மிகுந்த பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறது.

நாட்டு மக்களைப் பற்றி காங்கிரஸ் கட்சி கவலைப்படவில்லை. மக்கள் பாஜகவை 2-வது முறையாக ஆட்சி செய்ய தேர்ந்தெடுத்ததை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. பாஜக எம்.பி.க்கள் மத்திய அரசின் உண்மையான செயல்பாடுகளை மக்களின் முன் எடுத்துச் சென்று, எதிர்க்கட்சிகளின் பொய்களை வெளிப்படுத்த வேண்டும். கரோனா 3-வது அலை வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலைமைகளை சந்தித்து பணியாற்ற எம்.பி.க்கள் தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**அரசியலாக்க வேண்டாம்..**

மாநிலங்களவையில் நேற்று மாலை, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கு பதிலளித்து பேசியதாவது:

கரோனா வைரஸ் பரவலை தடுப்பதில் மாநில முதல்வர்கள் சிறப்பாக செயல்படுவதாக பிரதமர் நரேந்திர மோடி எப்போதும் பாராட்டு தெரிவித்து வருகிறார். வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் வெற்றி பெறும்போது, மாநில முதல்வர்கள் வெற்றியை சொந்தம் கொண்டாடுகின்றனர். தோல்வி ஏற்பட்டால் பிரதமர் நரேந்திர மோடியை குற்றம் சாட்டுகின்றனர். கரோனா விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்.

சில மாநிலங்கள் தடுப்பூசி விவகாரத்தை அரசியலாக்கி வருகின்றன. ஆனால் எந்த மாநில அரசு மீதும் நாங்கள் குற்றம் சாட்ட விரும்பவில்லை. நாட்டின் 130 கோடி மக்களும், அனைத்து மாநில அரசுகளும் ஒன்றிணைந்து செயல்பட்டால் கரோனா 3-வது அலையை தடுக்க முடியும். பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதல்படி செயல்பட்டால் 3-வது அலையில் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ள முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

### ஓரணியாக செயல்பட வேண்டும்..

கரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டெல்லியில் நேற்று மாலை அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. இதில் சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ், அதிமுக, சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், தெலங்கானா ராஷ்டிர சமிதி, ஐக்கிய ஜனதா தளம், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், பிஜு ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். காங்கிரஸ், அகாலிதளம், ஆம் ஆத்மி, இடதுசாரி கட்சிகள் இக்கூட்டத்தை புறக்கணித்தன.

இக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசும்போது, "கரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மத்திய, மாநில அரசுகள் ஓரணியாக செயல்பட வேண்டும். அப்போதுதான் கரோனாவுக்கு எதிரான போரில் வெற்றி பெற முடியும்" என்றார். கோவேக்சின் கரோனா தடுப்பூசிக்கு சர்வதேச அளவில் அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு கட்சிகள் கூட்டத்தில் வலியுறுத்தின.

# காவிரியில் திறக்கும் நீர் 10,000 கனஅடியாக குறைப்பு

**இரா.வினோத்**

**பெங்களூரு**

கர்நாடகாவின் குடகு, கேரளாவின் வயநாடு பகுதிகளில் கடந்த வாரம் கனமழை பெய்ததால் காவிரி, கபிலா ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் கிருஷ்ணராஜ சாகர், கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்ததால் இரு அணைகளின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்தது. தற்போது மழை அளவு குறைந்துள்ளதால் அணைகளுக்கு நீர் வரத்து கணிசமாக குறைந்துள்ளது.

நேற்று மாலை 6 மணி நிலவரப்படி 124.80 அடி உயரம் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 100 அடியை நெருங்கியுள்ளது. இந்த அணையில் இருந்து விநாடிக்கு 2,076 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மைசூரு மாவட்டத்தில் கடல் மட்டத்தில் இருந்து 2284 அடி உயரம் உள்ள கபினி அணையின் நீர்மட்டம் 2283.15 அடியாக உள்ளது. எனவே, அணையின் பாதுகாப்பு கருதி விநாடிக்கு 9,550 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது.

கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய அணைகளில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழகத்துக்கு 17 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. தற்போது அணைகளுக்கு நீர்வரத்து குறைந்ததால் தமிழகத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.



▲ பாஜக எம்.பி.க்கள் கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். படம்: பிடிஐ

# கரோனாவுக்கு பயந்து ஓராண்டாக வீட்டில் முடங்கிய குடும்பம்

● போலீஸார் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்

**என்.மகேஷ்குமார்**

**காக்கிநாடா**

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டம், ராஜோலு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சீனுவாசுலு (35). இவருக்கு மனைவி, ஒரு மகன், 2 மகள்கள் உள்ளனர். கடந்த ஆண்டு மார்ச் மாதம் கரோனா பரவத் தொடங்கியது. அப்போது முதல் சீனுவாசுலுவின் குடும்பத்தினர் கரோனாவுக்கு பயந்து வீட்டிலேயே தங்கிவிட்டனர்.

வாரத்துக்கு ஒரு முறை 10 வயது மகன் மட்டும் வெளியே வந்து தேவையான பொருட்களை அவர்களது ஊரிலேயே வாங்கிக் கொண்டு வீட்டிற்கு சென்று விடுவான். மீண்டும் கதவு அடைக்கப்பட்டுவிடும். இதனிடையே, இவர்களுக்கு அரசு சார்பில் வீட்டு மனைப்பட்டா ஒதுக்கப்பட்டது. இதற்கான தகவலை தெரிவிக்க தாசில்தார் அலுவலக ஊழியர்கள் வீட்டுக்கு சென்றனர். நீண்ட நேரமாக வீட்டின் கதவை தட்டியும் யாரும் திறக்கவில்லை.

கரோனாவுக்கு பயந்து வீட்டை விட்டு யாரும் வெளியே வருவதில்லை என கிராமத்தினர் தெரிவித்ததால், வருவாய் துறை ஊழியர்கள், ராஜோலு போலீஸாருக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் போலீஸார் வந்து வீட்டின் கதவை தட்டினர். வாசலில் நின்று எவ்வளவோ எடுத்துக்கூறியும் குடும்பத்தினர் கதவை திறக்கவில்லை.

வேறு வழியின்றி போலீஸார் கதவை உடைத்து வீட்டிற்குள் சென்றனர். அங்கு அனைவரும் உடல் மெலிந்து ஒருவித பீதியில் இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். 5 பேரையும் மீட்ட போலீஸார், அவர்களை காக்கிநாடா அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# உ.பி.யில் 45 மருத்துவமனைகளில் சோதனை

● குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்த பீர் பாட்டில்கள் பறிமுதல்

**ஆர்.ஷபிமுன்னா**

**புதுடெல்லி**

உ.பி. தலைநகர் லக்னோவில் 45 தனியார் மருத்துவமனைகளில் நேற்று அதிரடி சோதனை நடத்தப்பட்டது. அப்போது குளிர்சாதனப் பெட்டிகளில் பீர் பாட்டில்கள் இருந்ததை கண்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

உ.பி. தலைநகர் லக்னோவில் கரோனா தொற்றின் 2 அலைகளிலும் பரவல் அதிகமாக இருந்தது. இதனால் அங்கு தனியார் மருத்துவமனைகளிலும் பல ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றனர். இதில் பெரும்பாலான மருத்துவமனைகள் பல மடங்கு கட்டணம் வசூலித்துள்ளன. இது தொடர்பாக முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக அரசுக்கு புகார்கள் குவிந்தன.

தற்போது கரோனா பரவல் குறைந்துள்ள நிலையில், லக்னோவின் 45 தனியார் மருத்துவமனைகளில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது.

லக்னோ மாவட்ட ஆட்சியர் அபிஷேக் பாண்டே உத்தரவின் பேரில் துணை ஆட்சியர்களின் பல குழுக்கள் ஒரே நேரத்தில் சோதனை நடத்தின. இதில் அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசு உரிமம் இல்லாமலும் அல்லது அரசு உரிமம் புதுப்பிக்கப்படாமலும் பெரும்பாலான மருத்துவமனைகள் இயங்கி வந்துள்ளன. பலவற்றில் நிரந்தர மருத்துவர்கள் இல்லை. தற்காலிக மருத்துவர்களே பணியாற்றி வந்துள்ளனர். ‘நியூ ஏசியன் ஹாஸ்பிட்டல் அண்ட் ட்ராமா சென்டர்’ என்ற மருத்துவமனையில் பி.எஸ்சி. மட்டுமே பயின்ற அதன் உரிமையாளர் பிரேம்குமார் வர்மா, நோயாளிகளுக்கு மருத்துவம் பார்த்து வந்துள்ளார்.

செவிலியர் பணியில் அதன் பயிற்சிப்பள்ளி மாணவர்கள் பயிற்சி பெறும் பொருட்டு பணி செய்து வந்துள்ளனர். சோதனை நடந்த மருத்துவமனைகள் சிலவற்றில் குளிர்சாதனப் பெட்டிகளில் மருந்துகளுக்கு பதிலாக பீர் பாட்டில்கள் வைக்கப்பட்டிருந்தன. மூன்று மருத்துவமனைகளில் அவசர சிகிச்சை மற்றும் அதிநவீன சிகிச்சை பிரிவில் எக்ஸ்ரே உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை.

மருத்துவமனைகளில் இருந்த பல மருந்துக் கடைகளிலும் உரிமம் இல்லை. உரிமம் பெற்ற மருந்துக் கடைகளில் மருந்தக படிப்பு படித்தவர்கள் எவரும் இல்லை. அரசால் அனுமதிக்கப்பட்டதை விட அதிக படுக்கைகள் மருத்துவமனைகளில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. சிகிச்சைக்கு பின் வீடு திரும்பும் நோயாளிகளின் மருத்துவ அறிக்கைகள் எதுவும் பல மருத்துவமனைகளில் பதிவாகவில்லை.

இதனால், பல மருத்துவமனைகளை உடனடியாக மூடுமாறு லக்னோ மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி உத்தரவிட்டுள்ளார். மேலும், பல மருத்துவமனைகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

6 கோடி பிஎஃப் சந்தாதாரர்களுக்கு

# இம்மாத இறுதிக்குள் 8.5 சதவீத வட்டி டெபாசிட்

**புதுடெல்லி**

ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு (இபிஎப்ஓ) 2020-21-ம் நிதி ஆண்டுக்கான 8.5 சதவீத வட்டித் தொகை இம்மாத இறுதிக்குள் ஊழியர்களின் கணக்கில் சேரும் எனத் தெரிகிறது.

பிஎஃப் முதலீட்டுக்கான வட்டித் தொகையை செலுத்த உள்ளதால் 6 கோடி தொழிலாளர்கள் பயனடைவர்.

2020-21-ம் நிதி ஆண்டுக்கான வட்டி விகிதத்தில் (8.5%) எவ்வித மாறுதலும் செய்யப்படவில்லை. கரோனா வைரஸ் பரவல் காரணமாக பெரும்பாலானவர்கள் தங்களது பிஎஃப் சேமிப்பிலிருந்து பணத்தை எடுத்துள்ளனர். மிக அதிக அளவிலானோர் தங்களது சேமிப்பை எடுத்துவிட்டதால் வட்டி விகிதத்தை மாற்றம் செய்ய வேண்டாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கரோனா வைரஸ் பரவல் காரணமாக 2019-20-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் வட்டி விகிதம் 8.50 ஆகக் குறைக்கப்பட்டது. இது முந்தைய 7 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வட்டிவிகிதத்தை விட குறைவாகும்.

கரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட நிதி நெருக்கடியை சமாளிக்க தொழிலாளர்கள் தங்கள் சேமிப்புத் தொகையிலிருந்து திரும்ப செலுத்த வேண்டியிராத தொகையை முன்பணமாக பெற அனுமதி அளிக்கப்பட்டது. இதன்படி தங்களது சேமிப்பில் 75 சதவீத அளவுக்கு பணத்தை எடுக்க அனுமதிக்கப்பட்டது. இபிஎஃப்ஓ-வில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைக் காட்டிலும் தற்போது 20 சதவீதம் அதிகரித்துள்ளது. 7.56 லட்சம் பேர் புதிதாக சேர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

INDIA'S MOST TRUSTED JEWELLERY 59 YEARS OF EXCELLENCE SINCE 1962

A UNIT OF The Chennai Silks

मानक : पथप्रदर्शक:
BIS CERTIFIED JEWELLERS

# HALLMARK

## வெள்ளி கலெக்ஷன்களுடன்

நீங்கள் விரும்பும் பிரத்தியேகமான வெள்ளிப் பொருட்களின் பிரம்மாண்டமான சங்கமம்

AURORA
A BRAND FOR SILVER

# மாபெரும் வெள்ளி திருவிழா

ஜூலை – 21 முதல்



Hallmarked silver

- திருமண சீர்வரிசைப் பொருட்கள்
- அரோரா வெள்ளிக் கொலுசுகள்
- சுவாமி சிலைகள் & பூஜைப் பொருட்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- ஆன்டிக் உபகரணங்கள்
- குழந்தைகளுக்கான வெள்ளிப் பொருட்கள்



## வெள்ளையாக இருப்பதெல்லாம் வெள்ளியல்ல...

ஆம், ஸ்ரீ குமரன் தங்கமாளிகையில் வெள்ளிப் பாத்திரங்கள், திருமண சீர்வரிசை பொருட்கள், ஸ்பெஷல் கிரகப்பிரவேஷ செட்டுகள், வீட்டு உபயோகப் பொருட்கள், விதவிதமான வெள்ளிக் கொலுசுகள், ஆபரண வகைகள் என அனைத்தும் 100% ஹால்மார்க் தரச்சான்று பெற்றவை. இதனால் நீங்கள் 30% வரை தரத்தில் அதிக இலாபமாக சேமிக்கிறீர்கள்.

ஸ்ரீ குமரனில் எல்லாமே
FIXED PRICE
மார்க்கெட்லேயே அதுதாங்க
LOWEST PRICE

## உங்கள் பழைய வெள்ளியின் மதிப்பை அதிகரிக்க, எல்லா நாட்களிலும் எக்ஸ்சேஞ்ச் செய்யலாம்

உங்களது பழைய வெள்ளிப் பொருட்கள் மற்றும் உடைந்த வெள்ளிப் பொருட்களை, மார்க்கெட்டின் அதிகபட்ச விலைக்கு புத்தம் புதிய ஹால்மார்க் வெள்ளிப் பொருட்களாக எக்ஸ்சேஞ்ச் செய்து அதன் மதிப்பை உயர்த்திக் கொள்ளுங்கள்.

India's Most Trusted Jeweller

# ஸ்ரீ குமரன் தங்கமாளிகை

தங்கம் • வைரம் • பிளாட்டினம் • சில்வர்

**தி.நகர்:** உஸ்மான் ரோடு, சென்னை - 600 017. ✆ : 044 – 2431 0888
**வேளச்சேரி:** இரயில் நிலையம் அருகில், சென்னை - 600 042. ✆ : 044 – 2243 4888
**குரோம்பேட்டை:** GST ரோடு, சென்னை - 600 044. ✆ : 044 – 2241 3888
**திருவள்ளூர்:** கலெக்டர் அலுவலகம் அருகில், திருவள்ளூர் - 602 001. ✆ : 044 – 2767 7888

கார் பார்க்கிங் வசதியுடன் Shop online at www.sktm.in | Toll Free No: 1800 425 6663 தமிழ்நாடு – தெலுங்கானா – புதுச்சேரி